MADRAS

# ஆரம்பக்கல்வி




ஆரம்ப ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3] [தனி இதழ் அணா 4

மலர் 23 } ஜூலை 1961 { இதழ் 7

# நோக்கம் விழுமியதுதான்!
## ஆனால்
# நடைமுறை ஏற்பாடுகள்?

"தமிழகத்திற்குத் தனிப்பெருமை தரும் தலைசிறந்த திட்டம்" இந்த வார்த்தைகளை எடுத்துக் கூறிப் பூரிப்பும் பெருமையும் அடைகிறார்கள் சிலர்.

"இந்தியத் துணைக்கண்டத்திற்கே இந்தத் துறையில் நம்முடைய மாநிலம்தான் வழிகாட்டியாக அமைந்திருக்கிறது"—இந்த வாதத்தை எடுத்துக்காட்டி மகிழ்ச்சியும் மன நிறைவும் கொள்கிறார்கள் வேறு சிலர்.

"குழந்தைகள் உலகத்திற்குக் குதூகலத்தை அளிக்கும் திட்டம்"—இப்படிச் சொல்லிக் காட்டி எக்காளமிடுகிறார்கள் இன்னும் சிலர்.

"நாட்டு நலனில் நாட்டமுடையோர் அனைவரும் போற்றிப் புகழவேண்டிய பொன்னான திட்டம்"—இப்படி ஓர் சொல்லோவியம் தீட்டிக்காட்டி இன்ப அலைகளில் மிதக்கிறார்கள் மற்றும் சிலர்.

"செவிக்கு உணவு அளிக்கும் இடங்களிலேயே வயிற்றுக்கும் உணவளிப்பது, பொருத்தமான செயல்மட்டுமல்ல, புனிதமான செயலும் ஆகும்"—இத்தகையவிளக்க உரை புகன்று விம்மிதம் அடைந்து நிற்கிறார்கள் மேலும் சிலர்.

ஆம்! சென்ற சில ஆண்டுகளாகத் தமிழ்நாட்டின் தொடக்கப் பள்ளிகள் பலவற்றில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கும் நண்பகல் உணவுத் திட்டத்தைப் பற்றித்தான் இப்படியெல்லாம் போற்றியும் புகழ்ந்தும் பாராட்டியும் ஆதரித்தும் சொல்மாலை சூட்டி வருகின்றனர் பலர்.

நண்பகல் உணவுத் திட்டத்தின் நோக்கம் மிக உயர்ந்தது என்பதை எவரும் மறுத்தல் இயலாது. தமிழகத்தின் பல பகுதிகளில் தொடக்கப் பள்ளிகள் அமைந்துள்ள இடங்களுக்கும், பிள்ளைகளின் பெற்றோர்கள் வாழும் வீடுகளுக்கும் இடையே குறிப்பிடத்தக்க தொலைவிருக்கிறது. சில பகுதிகளில் இந்தத் தொலைவு இரண்டு மைல், மூன்று மைல் என்று சொல்லத்தக்க அளவு உடையதாகவும் இருக்கிறது. இப்படிப்பட்ட பகுதிகளில் உள்ள பிள்ளைகள், நண்பகல் நேரத்தில் பள்ளிக்கூடத்தில் விடப்படும் ஒரு மணி நேர இடை வெளியில், தங்கள் வீடுகளுக்குச் சென்று உணவு அருந்தி விட்டுத் திரும்பி வருவது என்பது இயலாத செயலாகும். பெரும்பாலான பிள்ளைகளின் பெற்றோர்கள் ஏழைகளாக இருக்கும் காரணத்தால், தங்கள் வீடுகளிலிருந்து ஆள் மூலம் தங்கள் பிள்ளைகளுக்கு உணவு அனுப்பிவைப்பதும் அவர்களால் முடியாத செயலாக இருக்கிறது. இது மட்டுமல்ல, எண்ணற்ற பெற்றோர்கள் அளவற்ற வறுமையிற் சிக்குண்டு எல்லையற்ற துயரத்தில் மூழ்கியிருக்கும் காரணத்தால் தங்கள் பிள்ளைகட்குத் தேவையான உணவை அளிக்கத்தக்க ஆற்றல் அற்றவர்களாகவும் இருக்கிறார்கள். வேதனையும் வருத்தமும் அளிக்கத்தக்க இந்தச் சூழ்நிலைகளின் விளைவாகத் தொடக்கப் பள்ளிகளிற் பயிலும் பிள்ளைகளிற் பலர் நண்பகல் உணவில்லாமலே பட்டினியாக இருக்கிறார்கள். அப்படி இருப்பதன் விளைவாக அவர்களுடைய உடல் வளமும் மனநலமும் கெட்டு, கல்விப் பொருளை அள்ளி விழுங்குவதில் அவர்களுக்கு இருக்க வேண்டிய ஆர்வமும் குறைந்துவிடுகிறது. கிராமப் பகுதிகளில் வாழும் ஏழைப் பெற்றோர்களிற் பலர் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்ப மறுப்பதற்கு இது ஒரு தலைசிறந்த காரணம் என்பதை நாடு நன்கறியும்.

தொடக்கப் பள்ளிகளிற் பயிலும் ஏழைப் பிள்ளைகள் அனைவருக்கும் அந்தப் பள்ளிக்கூடங்களிலேயே நண்பகல் உணவு இலவசமாக அளித்தால் இந்தத் துயரங்களும் சிக்கல்களும் தீர்ந்து விடும்; எல்லாப் பெற்ரோர்களும் தங்கள் பிள்ளைகளை எத்தகைய கட்டாயமும் இல்லாமலே பள்ளிக்கூடங்கட்கு அனுப்புவர்; ஏழைப் பிள்ளைகளும் தங்கள் உணவைப் பற்றிய கவலையின்றித் தங்கள் முழு ஆர்வத்தையும் கல்விச் செல்வத்தின் மீது திருப்புவர்—என்னும் சிறந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஓங்கி உயர்ந்து நிற்கும் மாளிகைதான் நண்பகல் உணவுத்திட்டம்.

நாம் தொடக்கத்தில் எடுத்துக் காட்டியதைப் போல இந்த நோக்கம், உயர்வும் சிறப்பும் மிகுந்தது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். இத்தகைய விழுமிய நோக்கம் கொண்ட உயரிய திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ள தமிழ்நாட்டு அரசினரையும், அவர்கட்கு இந்த எண்ணத்தை ஊட்டிய கல்வித்துறை நெறியாளரையும் நாம் போற்றிப் புகழக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதையும் எவரும் மறுத்தல் இயலாது.

ஆனால் ஒன்று.

**ஒரு திட்டத்தால் கிடைக்கக்கூடிய முழுப் பயனையும் நாடு பெறவேண்டுமானால் அந்தத் திட்டத்தின் நோக்கம் விழுப்பம் நிறைந்ததாக இருந்து விட்டால் மட்டும் போதாது; அந்தத் திட்டத்தை நடைமுறையிற் கொண்டு செல்லும் முறைகளும் அப்பழுக்கு அற்றவைகளாக இருக்க வேண்டும்.**

தமிழகத்தில் தற்போது நடத்தப்பட்டுவரும் நண்பகல் உணவுத் திட்டத்தின் நோக்கம் மிக விழுமிய ஒன்று என்பதை நாட்டு மக்கள் அத்தனை பேரும் ஏற்றுக் கொள்கிறார்கள்.

ஆனால் அந்தத் திட்டத்தின் நடைமுறைப் போக்கு ?

அதுவும் விழுமியதாக இருக்கிறது என்று நெஞ்சை நிமிர்த்திக் கூறமுடியுமா ?

முடியாது என்கிறது இந்தத் திட்டத்தையும் இதுபோன்ற பள்ளிச் சீரமைப்புத் திட்டங்களையும் ஆராய்ந்து தீர்ப்பு அளிப்பதற்காக என்று தமிழ்நாட்டு அரசினரால் நியமிக்கப்பட்ட ஆய்வுக்குழு.

நண்பகல் உணவுத் திட்டத்தின் நடைமுறை ஏற்பாடுகளில் என்னென்ன குறைபாடுகளும் தவறுகளும் நெளிந்துகிடக்கின்றன தெரியுமா ?

இதோ அந்தக் குழுவினரே பேசுகிறார்கள்:—

"அரசாங்க மானியத் தொகையை" அதிகமாகப் பெறும் பொருட்டு நன்கொடைக் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன. நண்பகல் உணவு பெறக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையிலும் பொய்யான விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன.........உணவுக்கான பண்டங்கள் வாங்குவதிலும் பொய் இரசீதுகள் பல இடங்களில் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. பொய்க் கணக்கு என்ற ஐயம் எழாதபடிச் சில இடங்களில் கச்சிதமாகக் கணக்கு தயாரிக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களில் எந்தவிதப் பதிவேடுகளும் வைக்கப்பட்டிருக்கவில்லை."

இவ்வளவு தானா குறைபாடுகள்? இன்னமும் பல இருக்கின்றன என்கிறார்கள் அக்குழுவினர். இதோ, அவர்களுடைய வார்த்தைகள்:

"முறைப்படி ஒவ்வொரு மாணவனுக்கும் நாள் ஒன்றுக்குப் பத்து காசு பெறுமானம் உள்ள உணவு அளிக்க வேண்டும். இதுவே மிகக் குறைவானது. ஆனால் பல இடங்களில் இந்த அளவு உணவு கூடத் தரப்படாமல் இதிலும் குறைத்துத் தரப்பட்டிருக்கிறது."

இவ்வளவு குறைபாடுகளும் கோளாறுகளும் மிகுந்ததாக நண்பகல் உணவுத் திட்டம் இருக்குமானால், இந்தத் திட்டத்திலிருந்து ஏழைப் பிள்ளைகளுக்குக் கிடைக்கவேண்டிய முழு நன்மையும் எப்படிக் கிடைக்கமுடியும்? அப்படிக் கிடைக்காத வரையில், இந்தத் திட்டத்தின் நோக்கம் எவ்வளவுதான் உயரியதாக இருந்தாலும், இதன் நடைமுறையை எப்படி நாம் போற்றிப் புகழமுடியும்?

இந்தத் திட்டத்தின் நடைமுறையில் அளவுகடந்த ஊழல்கள் பெருகியிருப்பதற்கு, நாம் அறிந்தவரையில், மூன்று காரணங்கள் இருக்கின்றன.

ஒவ்வொரு மாணவனுக்கும் அரசினரால் அனுமதிக்கப்பட்டுள்ள உணவின் அளவு மிகக் குறைவாக இருப்பதுதான், ஊழல்கள் பெருகுவதற்கான முதற் காரணமாகும். ஒவ்வொரு மாணவனுக்கும் நாள் ஒன்றுக்குப் பத்து காசு பெறுமானம் உள்ள உணவு அளிக்கப்பட வேண்டும் என்பது அரசினரின் ஏற்பாடு. உணவைத் தயாரிப்பதற்குத் தேவையான அரிசி, எண்ணெய், பருப்பு, காய்கறி, விறகு, கரி ஆகிய பண்டங்களின் விலைகள் யாவும் பயங்கரமான அளவுக்கு உயர்ந்துவிட்ட இந்தக் காலத்தில் பத்தே பத்து காசுகளை வைத்துக் கொண்டு ஒரு பிள்ளைக்கு எப்படி உணவளிக்க முடியும்? இத்தகைய சூழ்நிலையில், உண்மையாக உணவு அருந்தும் பிள்ளைகளின் எண்ணிக்கையைவிட அதிகமான பிள்ளைகள் உணவு அருந்துவதாகக் கணக்கை எழுதினாலொழிய, உண்மையாக உணவு அருந்தும் பிள்ளைகளுக்கு அரைவயிற்று உணவையாவது எப்படி அளிக்க முடியும்?

அரை வயிற்று உணவுக்குக்கூடப் போதாத ஒரு சிறு தொகையை—பத்தே பத்து காசுகளை மட்டும் செலவழிக்க அனுமதி கொடுத்து விட்டு, அப்படிப்பட்ட தொகைக்குள்ளாகவே போதுமான உணவையும் அளிக்க வேண்டும்—ஊழல் இல்லாத கணக்குப் புத்தகமும் இருக்க வேண்டும் என்றால், அது எப்படி சாத்தியமாகும்?

ஊழல்கள் நிறைந்திருப்பதற்கான மற்றோர் காரணம், ஒவ்வோர் பிள்ளைக்கும் அனுமதிக்கப்பட்டுள்ள பத்துக் காசுகளைக்கூட அரசினர் முழுமையாக அளிக்காமல் ஆறு காசுகளை மட்டும் கொடுத்துவிட்டு, ஏனைய நான்கு காசுகளைப் பள்ளிக்கூட நிர்வாகிகளே பொதுமக்களிடமிருந்து நன்கொடையாகத் திரட்டவேண்டும் என்று செய்துள்ள ஏற்பாடாகும். ஐந்தாவது வகுப்பு வரை எல்லாப் பிள்ளைகளுக்கும் இலவசக் கல்வி என்கிற திட்டம் நடைமுறைக்கு வந்த ஆண்டிலிருந்து, உதவிபெறும் தொடக்கப் பள்ளிகளின் பொருளாதார நிலை, அளவு கடந்த நெருக்கடிக்கு ஆளாகித் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. அரசினர் அளித்துவரும் நிர்வாக உதவித் தொகை மிக மிகக் குறைவாகவும், பள்ளிக்கூடத்தை நடத்திச் செல்லுவதற்குத் தேவையான நியாயமான செலவுகளின் அளவு மிக அதிகமாகவும் இருக்கும் காரணத்தால், இந்த இரண்டிற்கும் நடுவே உள்ள இடைவெளியை எப்படி நிரப்புவது என்பது புரியாமல் உதவி பெறும் தொடக்கப் பள்ளி நிர்வாகிகள் யாவரும் திண்டாடிக்கொண்டிருக்கும் துயரம் மிகுந்த காலம் இது. பள்ளிக் கூடத்தின் அன்றாடச் செலவுக்கே அவர்கள் பொதுமக்களை அணுகிக் கெஞ்சிக் குறையிரந்து நன்கொடை திரட்டினாலொழியத் தங்கள் பள்ளிகளை நடத்த முடியாத நெருக்கடி நிலவுகிற நாட்கள் இவை. எத்தனையோ முறை மாநாடுகளைக் கூட்டியும், ஊர்வலங்கள் நடத்தியும், பொதுக் கூட்டங்கள் போட்டும், அறிக்கைகள் அனுப்பியும், அமைச்சர்களைப் பேட்டி கண்டும்கூடத் தங்கள் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க ஆட்சித் தலைவர்கள் அணுவளவும் கவலைப்படாமல் இருப்பது கண்டு, ஆண்டுகள் பலவாகத் தாங்கள் அரும்பாடுபட்டு வளர்த்த பள்ளிகளின் நிலை இப்படியா ஆகவேண்டும் என்று எண்ணி எண்ணி அவர்கள் சோக சித்திரங்களாக உருமாறி விட்ட சகாப்தம் இது. இப்படிப்பட்ட வேதனை நிரம்பிய நெஞ்சத்தவர்களைப் பார்த்து அவர்களுடைய வேதனையைக் குறைப்பதற்குச் சிறிதளவும் முயற்சி எடுத்துக் கொள்ளாமல், ஆட்சியாளர்கள், நண்பகல் உணவுத் திட்டத்தை எப்படியாவது நடத்திக்காட்டுங்கள்—அதற்காக வேறு நன்கொடையை எங்கிருந்தாவது திரட்டி வாருங்கள் என்று கூறினால், அது எப்படி நியாயமாகும்? நியாயமோ இல்லையோ, அது எப்படி நடைமுறையில் இயலக்கூடிய செயலாகும்? தங்கள் பள்ளிச் செலவுக்குத் தேவையான பணத்தையே திரட்ட முடி

யாமல் தத்தளித்துக் கொண்டிருக்கும் பள்ளி நிர்வாகிகள், நண்பகல் உணவுத் திட்டத்திற்காக மட்டும் எங்கிருந்து பணத்தைத் திரட்டி வரமுடியும்? வெந்த புண்ணில் வேலைச் செருகுவது போல அல்லவா இருக்கிறது இந்த யோசனை?

நண்பகல் உணவுத் திட்டத்தில் ஊழல்கள் செறிந்து மிடைந்து பல்கிப் பெருகியிருப்பதற்கான மூன்றாவது காரணம், "இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து அதனை அவன்கண் விடல்" என்னும் அருமையான திருக்குறள் பாடலை ஆட்சித் தலைவர்கள் மறந்துவிட்டதே ஆகும். ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்வதற்கு யார் யாரிடம் தகுதியும் திறமையும் வாய்ப்பும் வசதியும் இருக்கின்றனவோ அவர்களிடம் அந்த வேலையை ஒப்படைக்காமல், யார்யாரிடம் அந்த வசதிகள் இல்லையோ அவர்களிடம் அதை ஒப்படைத்தால், அந்த வேலை எப்படித் தட்டுத் தடங்கலின்றி நிறைவேற முடியும்? நண்பகல் உணவுத் திட்டம் முறைப்படி நடைபெற்று அதனால் விளையத்தக்க முழுப்பயனும் விளைந்தாக வேண்டுமானால் அந்தத் திட்டத்தை அரசாங்கத்தினரே, அதற்கென்று ஓர் இலாகாவை ஏற்படுத்தி, அதன் மூலம் நடைமுறைப்படுத்த வேண்டும். அல்லது அந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்குத் தேவைப்படும் பணம் முழுவதையும் அந்தந்த வட்டாரங்களில் உள்ள உள்ளாட்சி மன்றங்களிடம் ஒப்படைத்து, திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு அம் மன்றங்களைக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

1. அரசாங்கத்தார்.

2. ஊராட்சி மன்றம், ஊராட்சி மன்ற ஒன்றியம், (யூனியன்) நகராட்சி மன்றம், மாநகராட்சி மன்றம் முதலிய உள்ளாட்சி மன்றங்கள்.

இந்த இரண்டு சாராருக்குத்தான் நண்பகல் உணவுத் திட்டத்தை ஒழுங்கான முறையிலும் சிறப்பான வகையிலும் நிறைவேற்றித் தருவதற்கு உரிய பண வசதி, ஆள் வசதி, அதிகார வசதி முதலிய எல்லா வசதிகளும் உண்டு. இந்த இரு சாராரில், அரசாங்கத்தார் மட்டுமோ, அல்லது ஊராட்சிமன்றத்தார் மட்டுமோ, அல்லது இரண்டு சாராரும் இணைந்தோ இந்தத் திட்டத்தை நடத்திச் செல்வதுதான் முறை; நியாயம்; ஒழுங்கு; பயன் தரத்தக்க ஏற்பாடு.

இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளிலும் சரி, பல்வேறு ஐரோப்பிய நாடுகளிலும் சரி, நண்பகல் உணவுத் திட்டம் இப்படித்தான் நடத்தப்பட்டு வருகிறது. குறிப்பாகவும் சிறப்பாகவும் இங்கிலாந்தில், தொடக்கப்பள்ளிகளில் பயிலும் எல்லாப் பிள்ளைகளுக்கும், ஏழைப் பிள்ளைகளாக இருந்தால் இலவசமாகவும், ஏனைய பிள்ளைக

ளாக இருந்தால் மலிவு விலையிலும் நண்பகல் உணவு அளிக்கப்படுகிறது. உணவு என்றால் பத்துக் காசு பெறுமானம் உள்ள கால் வயிற்று உணவு அல்ல. அங்கே அளிக்கப்படுகிற உணவில் கால்பங்கைக்கூட நம் நாட்டுக் குழந்தைகள் அருந்த முடியாது என்று அங்கு சென்று வந்தவர்கள் தெரிவிக்கிறார்கள். அத்தகைய நிறைந்த அளவில் சிறந்த உணவு அங்கே தரப்படுகிறது என்பது மட்டுமல்ல கவனிக்கப்பட வேண்டிய உண்மை. நடக்கும் தொலைவுக்கு அப்பால் வசிக்கும் பிள்ளைகளுக்குப் போக வர இலவசப் பஸ் வசதியும் அங்கே தரப்படுகிறது. ஏழைப் பிள்ளைகளுக்குப் பாடப் புத்தகங்களும் இலவசமாக அளிக்கப்படுகின்றன. அதுமட்டுமல்ல—பதினைந்து வயதுவரை உள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் அருமையான பாலும் இனாமாக அளிக்கப்படுகின்றது.

இத்தனை வசதிகளையும் பிள்ளைகளுக்கு ஒழுங்காக ஏற்படுத்தித் தரும் பொறுப்பு அங்கே யாரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது தெரியுமா? பள்ளிக்கூட நிர்வாகிகளிடம் அல்ல! கவுண்டி கவுன்சில்கள், பர்ரோ கவுன்சில்கள், முனிசிபாலிடிகள் என்றெல்லாம் அங்கே அழைக்கப்படும் உள்ளாட்சி மன்றங்களிடம்தான்! அம்மன்றங்களிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருப்பதனால்தான் இத்தனைத் திட்டங்களும் எத்தகைய குறைகளும் இன்றி அங்கே நிறைவேறுகின்றன.

இங்கிலாந்தில் மட்டுமல்ல, எல்லா மேல் நாடுகளிலுமே ஏறத்தாழ உள்ளாட்சி மன்றங்கள்தாம் இந்தப் பொறுப்பைச் செம்மையாகவும் சிறப்பாகவும் நிறைவேற்றி வருகின்றன.

ஆனால் தமிழகத்திலோ? தங்கள் பள்ளிச் செலவிற்கே பணமின்றிப் பரிதவிக்கும் நிர்வாகிகளிடம் இந்தப் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்த நிர்வாகிகளின் நேரம் முழுவதும், உழைப்பு முழுவதும், பணம் முழுவதும் பள்ளிக்கூடத்தை நடத்திச் செல்லும் அவர்களுடைய முதற்பெரும் பணிக்கே அர்ப்பணிக்கப்படுவதுதான் முறையே தவிர வேறு ஓர் துறைக்கு அவற்றைத் திருப்பிவிட முயல்வது எவ்வாறு நியாயமாகும்? அப்படித் திருப்பி விட்டுவிட்டு, உணவுத் திட்டத்தில் ஊழல்கள் பெருகிவிட்டனவே—குறைபாடுகள் நிறைந்துவிட்டனவே என்று கைகளைப் பிசைந்து கொள்வதால் என்ன நன்மை ஏற்படமுடியும்?

பல இடங்களில் நண்பகல் உணவுத் திட்டத்திற்குத் தேவையான நன்கொடையைப் பணமாகவோ அரிசி முதலிய உணவுப் பொருளாகவோ திரட்டித் தரவேண்டிய பொறுப்பும் உழைப்பும் பள்ளிக்கூட ஆசிரியர்கள்மீது தள்ளப்பட்டுவிடுகின்றன. பல இடங்களில் சமைப்பதற்கு என்று ஊதியம் கொடுத்து ஆளைவைக்க முடி

யாத பண நெருக்கடி இருப்பதால் பெண் ஆசிரியர்களே சமையல் வேலையை மேற்கொள்ள வேண்டிய பரிதாபச் சூழ்நிலை உண்டாகிவிடுகிறது. ஆண் ஆசிரியர்களுக்கு அரிசியையும் பருப்பையும் நன்கொடை மூலம் திரட்டும் வேலை! பெண் ஆசிரியர்களுக்கு அப்படித் திரட்டப்பட்ட பண்டங்களை உணவாகச் சமைத்துப் பரிமாறும் வேலை! இந்த வேலையில் இவர்கள் ஈடுபட்டுவிட்டால், அப்படி ஈடுபடுகிற நேரத்தில், கல்விப் பயிற்சியை அளிப்பவர்கள் யார்? ஆசிரியர்களின் ஊக்கமும் உழைப்பும் ஆர்வமும் திறமையும் இப்படி வேறு ஓர் துறைக்கு மாற்றப்பட்டுவிட்டால், அவர்களால் அளிக்கப்படுகிற கல்வியின் தரம் எப்படி உயரியதாக இருக்கமுடியும்?

நண்பகல் உணவுத் திட்டத்தின் நடைமுறையில் தற்போது செறிந்துள்ள குறைபாடுகள் யாவும் களையப்பட வேண்டுமானால் ஆட்சியாளர்கள் அன்புகூர்ந்து கீழ்க்கண்ட ஏற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

1. நண்பகல் உணவுத் திட்டத்தை நடைமுறைப் படுத்தும் பொறுப்பு முழுவதும் கிராமங்களில் பஞ்சாயத்து யூனியன்கள் எனப்படும் ஊராட்சி மன்ற ஒன்றியங்களிடமும், நகரங்களில் நகராட்சி மன்றங்களிடமும் ஒப்படைக்கப்பட வேண்டும். மாணவர்கள் அமர்ந்து உண்பதற்கான இடவசதி செய்துதரும் பொறுப்பு ஒன்றைத் தவிர வேறு எந்தவகைப் பொறுப்பும் இந்தத் துறையில் பள்ளி நிர்வாகிகட்கு இருத்தல் கூடாது. ஆசிரியர்கட்கும் இந்தத் திட்டத்திற்கும் எந்தவிதத் தொடர்பும் இருத்தல் ஆகாது.

2. நாள் ஒன்றுக்கு மாணவன் ஒருவனுக்கு அனுமதிக்கப்படும் தொகை குறைந்தது இருபது காசுகளாக உயர்த்தப்பட வேண்டும். முடியுமானால் இந்தத் தொகை முழுவதையும் அரசினரே அளித்துவிட வேண்டும். அது இயலவில்லை என்றால், பதினைந்து காசுகளை அரசாங்கம் கொடுத்துவிட்டு, மிச்சத் தொகையை உள்ளாட்சி மன்றங்கள், தங்கள் பொதுநிதியிலிருந்து ஒதுக்கிக்கொள்ள —அல்லது அதற்கென்று தனி வரி விதித்துத் திரட்ட—அல்லது நன்கொடைமூலம் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும்.

விழுமிய நோக்கத்தைக் கொண்டுள்ள நண்பகல் உணவுத் திட்டம் சீரிய பயனையும் அளிக்க வேண்டுமானால் இந்த இருவகை ஏற்பாடுகளையும் செய்தே தீரவேண்டும். இங்கிலாந்து முதலிய மேற்கு நாடுகளின் அனுபவம் இந்தத் துறையில் நமக்கு அளிக்கும் சிறந்த பாடம் இது.

# சித்த மருத்துவச் சித்தர் மறைந்தார்.

இரா. செகதீசன், தமிழாசிரியர்,
தாசர் பெரும் பள்ளி.

தோற்றுவாய்: உலகிற் பலருந்தான் பிறக்கின்றனர்; வாழ்கின்றனர்; வீழ்கின்றனர். ஆனால் சிலர்தான் மக்கள் மனத்துள் உறையுமளவிற்குச் சிறக்கின்றனர். இறந்தும் இறவாத பேறு பெறுகின்றனர். அங்ஙனம் அன்னார் பெரும்பேறு பெறுகின்றமை எவ்வாற்றாலெனின், அவர்தம் சுயநலம் கலவாத சான்றாண்மையும், சலியாத நல்லுழைப்புமேயாம். தன்னை மறந்து—தன் மனை நலத்தைத் துறந்து பொதுத்தொண்டொன்றையே தன் தவத் தொண்டாகக் கொண்டு நாளெல்லாம் நல்வினையாற்றியபெற்றியேயாம். நம் நாட்டிற்கும் — கல்விக்கும்-நாட்டு மருத்துவத்திற்கும் ஒல்லும் வகையெல்லாம் நற்றொண்டுகள் பலவாற்றி நம்மிடையே பிரியா விடைபெற்று இறைவர் கழலடி சேர்ந்த சித்த மருத்துவச் சித்தர் திரு. ஹென்றி தேவதாசரின் வாழ்க்கை வரலாற்றினை ஈண்டு அறிதல் நம்மனோர்க்கு நல்லதேயாம்.



காலஞ் சென்ற ஹென்றி தேவதாஸ்

பிறப்பு - வளர்ச்சி:— திரு. தேவதாசர் அவர்கள் பாளையங்கோட்டையில் வாழ்ந்த சுந்தரம் பிள்ளை என்ற பெரியாருக்கு செல்லம்மாள் என்ற அம்மையாரிடம் (1884ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 4-ம் நாள்) நான்காவது மகனாகத் தோன்றினார். வளரும் பயிர் முளையிலேயே தெரியும் என்ற பழமொழிக்கொப்ப நம் தாசர் இளமைமுதலே பொறுமையின் வித்தாய் விளங்கினார். தாம் உண்டு, தம் படிப்புண்டு என்று இருந்திடாது பற்பல பொதுத் தொண்டுகள் ஆற்றி பள்ளியிலும் அக்கம் பக்கங்களிலும் "நல்ல பிள்ளை", "ஒழுக்க சீலன்" என்ற நற்பெயரைப் பெற்றார்.

படிப்பு: நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்த அவர் ஆண்டுதோறும் படிப்படியாக வகுப்பு மாற்றங்களை அடைந்து கல்லூரியிற் சேர்ந்து 'B.A'-பட்டமும் பெற்றார். சிறு வயது முதலே அவரது உள்ளம் ஆய்வுக்கூடமாக விளங்கிற்று. விஞ்ஞானம் - அவரது உள்ளத்தை ஈர்த்தது. கல்லூரியிலும் விஞ்ஞானமே அவரது விருப்பப் பாடமாகும்.

அக்காலத்தில் அவரது படிப்பிற்கும் - பண்பிற்கும் பலப்பல

வேலைகள் அவருக்குக் கிடைத்திருக்கக்கூடும். ஆனால் அவ் வேலைகளில் அவருக்குப் பிடிப்பில்லை. குறைந்த ஊதியமும் — குறைவற்ற வசதிகளும் தரும் ஆசிரியர் பணியே அவரைக் கொள்ளை கொண்டதெனின் அவரது பொதுப்பணி விருப்பை என்னென்பது. அப் பணியை அந்நாளில் வாழ்ந்த அவர்தம் பெற்றோரும் - உற்றோரும் விரும்பவில்லை. தன்வழியே தனி வழி என்று கருதிவாழ்ந்த அவர், அவர்களது தடுப்பைக் கண்டு தளர்ந்தாரில்லை. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிற் சேர்ந்து L. T., பட்டமும் பெற்றார்.

**திருமணம்:—** அப்போது தேவதாசர்க்குப் பக்குவம் கொழுமிய வயது. பாகுமொழி பேசும் பருவம். இளமைப் பொலிவும்— கொள்கை வலிவும் கொண்ட தாசர் 1910ம் ஆண்டு மே திங்கள் 11ம் நாள் திருமதி. மேரி திரவியம் என்ற அம்மையாரை மணந்து இன்புற்றார். தேவதாசும் - திரவியம் அம்மையும் வானும் உருவும்போல் மேதகுவாழ்வு வாழ்ந்து வருவாராயினர்.

நம் ஐயா அவர்கள் அந்நேரத்திலும் பொதுத் தொண்டு - பொதுத் தொண்டு என்பதையே மூல மந்திரமாகக் கொண்டிருந்தார்.

**தொழில்:** பொதுப்பணி ஒன்றிலேயே ஒன்றிவிட்டால் வயிற்றுப் பணியைக் கவனிப்பார் யார்? அவர் அன்று ஒருவரோ? இல்லையே! அவருக்கொரு காற்கட்டு உளதன்றோ? ஆகவே அவர் அம்மையாருக்காகவேனும் பொருள் தேட வேண்டியவரானார். பாளையங் கோட்டையிலும் — திருவனந்தபுரத்திலும் வாழ்ந்த அவர் சென்னையிற் குடியேறினார். சென்னையே அவரைப் பெருமனிதராக்கிய புனித இடமாகும்.

சென்னையில் திருவல்லிக்கேணி உயர்நிலைப்பள்ளி, நார்த்விக் பெண்பள்ளி ஆகியவற்றில் விஞ்ஞான ஆசிரியராகச் சில ஆண்டுகளும், சென்னை கிறித்துவக் கல்லூரியில் விஞ்ஞான விரிவுரையாளராகச் சில ஆண்டுகளும் பணியாற்றினார். ஆனால் அவர் அத் தொழில்களை விரைவில் விட்டு விலக நேர்ந்தது. காரணம்...? அஞ்சி அஞ்சியும் — அடங்கி ஒடுங்கியும் வாழும் வாழ்வு அவருக்கு அறவே பிடிக்காததேதான். அவர் எவ்வெவற்றைச் செய்யக் கருதி வந்தாரோ அவற்றையெல்லாம் செய்ய — சொல்ல வியலாதுபோகவே அப் பணிகளையெல்லாம் உதறித் தள்ளினார். மேலும் நகர வாழ்க்கை அவருக்குக் கசந்தது. நாட்டுப்புற வாழ்க்கை அவருக்கினித்தது.

**தின்னனூர் வருகை:** தாம் ஈட்டிய பணம், பெற்றோர் தந்த தனம் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு தம் துணைவியாரோடு 1920ம் ஆண்டு சென்னைக்குச் சுமார் இருபது கல் தொலைவில் உள்ள தின்னனூர் என வழங்கும்

திருநின்றவூரில் வந்து குடியேறினார்.

திருநின்றவூர் அன்றும் பெரிய ஊரே! சரித்திரப் புகழ் பெற்ற ஊரே! பூசலார் புராணம் எழுதுவதற்குக் காரணமானதும் இவ்வூரே! எனினும் காடு-மேடு-கரம்பு இல்லாமலில்லை. காடவர் கோன் கடாட்சம் பெற்ற ஊர் எனினும் கல்வித் தட்டுப்பாடு இல்லாமலில்லை "**காரைக் கொல்லைமேடு**" என்பது திருநின்றவூரில் இருந்த காட்டுமேட்டுப் பகுதியாகும். அவ்விடம் நம் தாசருக்குப் பிடித்தமாயிற்று. அந்நிலப் பரப்பை விலைக்கு வாங்கினார். என்னடா இது! போயும் போயும் இக் காட்டிடத்தைத் தானா இவர் வாங்கினார்? பணத்தைச் செலவழிக்கத் தெரியாதவர் போலும் எனப் பலர் எண்ணினர். அந்த இடந்தான் தாசரை—உலகின் நேசராக நேர்மையின் ராசராக ஆக்கப்போகும் இடம் என்பதை அந்நாளில் எவரும் நினைத்திலர்.

காடுகளை வெட்டி - மேடு பள்ளத்தைச் சமப்படுத்தி முதலில் தமக்கெனத் தனிக்குடில் ஒன்றை அமைத்துக்கொண்டார். பூசலார் நாயனார் எவ்வாறு தம் இதயத்துள்ளேயே சிவன் ஆலயத்தைச் சமைத்தாரோ அவ்வாறே நம் தாசரும் தம் அகத்திற்குள்ளேயே அப்பகுதி வளர்வதற்கான வழி முறைகளையெல்லாம் வகுத்துக் கொண்டார். காரைக் கொல்லை தாசர்புரம் என்ற தண்ணிய பெயரைப் பெற்றது.

மேனாட்டு நவநாகரிக உடைகள் அவரது உடலைவிட்டோடின. தூய்ய காவியுடை அவரது உடலிற் கவிந்தது. எளிமை வாழ்க்கையும்-இனிமைப்பேச்சும்-புவிப் பொறையும் அன்று முதல் நேற்று வரை அவரது அணிகலன்களாகும்.

அவரால் தாசர்புரம் தழைத்தது. பல்லோர் வந்து குடியேறி வசதி பெற்றனர். தாசர்புரம் மாந்தோப்பும் தூரவும்துப்புரவான வீடுகளும் சூழ்ந்த பகுதியாயிற்று. நம் தாசரின் அண்ணா திருவாளர், ஜான் அவர்களும் தாசர்புரத்திற் குடியேறித் தாம் வாழுதற்கேற்ற பெருவீடும், கிறிஸ்துவத் தேவாலயமும் அமைத்தார்.

**கல்விக் கூடம்** :—அந்நாளில் திருநின்றவூரிலும் - சுற்றுப்புறங்களிலும் எல்லா இனத்தவரும் சேர்ந்து படிக்கத் தக்க வசதிகள் கூடிய பள்ளிகளில்லை. கல்வியன்றோ மக்களின் கண்! அதுவன்றோ நல்வழி காட்டும் கலங்கரை விளக்கு! அதுவன்றோ தீமையை வெல்லும் வீரன்! அக்கல்வி இல்லையே எனஉணர்ந்த தாசர் ஒல்லையில் ஒரு ஆரம்பப் பள்ளியைத் துவக்கினார். அப்போது வெகு சிலரே பயின்றனர். தற்போது பல நூறு மாணவர்கள் பயிலும் பெரும்பள்ளியாக அச்சிறுபள்ளி கவின்மிகு

காட்சி தருகின்றது. இப்பள்ளியால் பயன் பெற்றோர் அனந்தம்.

வங்கக் கவிஞர் நடாத்திய சாந்தி நிகேதனத்திற்கு இப் பள்ளி ஈடாகும். ஆடும் மாடும்—பாம்பும் பூரானும்—பறவையும் பச்சைக் கொடியும் மரமும் அடர்ந்த இடத்தை மக்களும் வாழும் இடமாக, மாணவர் பயிலும் பள்ளியாக—கனி குலுங்கும் சோலையாக மாற்றிய தாசரின் தொண்டு எவரும் மறத்தற்கரியதாகும்.

**சித்த மருத்துவம் :**—மனவிருள் நீங்கக் கல்விச்சாலை கண்ட அவர், மக்கள் பிணி நீக்கும் மருத்துவச் சாலையும் அமைத்தார். உடையைத் தானே மாற்றினார்? மேனாட்டு உள்ளத்தை மாற்றினாரா என்பதற்குச் சரியான விடை அவர் தமிழகத்துக்குச் சித்த மருத்துவச் சாலை அமைத்ததிலிருந்தே தெரிய வரும். நம் நாட்டில் நிலவி வரும் பல மருத்துவ முறைகளிற் சித்த மருத்துவமே சிறந்தது எனக் கொண்டார். ஆயுர்வேதத்தினும் சித்த மருத்துவம் உயர்ந்தது என ஆணித்தரமாக எழுதினார். சித்த மருத்துவத்தை ஏற்கும்படி நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். தூங்கியும்—ஏங்கியும் கிடந்த சித்த மருத்துவமெல்லாம் அவரால் புத்துயிர் பெற்றனர். ஆயுள்வேதத்தின் திரிபே ஆயுர்வேதம் என்றும்—ஆகவே ஆயுள் வேதமும் சித்த மருத்துவமே என்றும் எண்ணினார். அதற்கான சான்றுகளும் காண்பிப்பாராயினார்.

நவலோகங்கள், பச்சை இலை மூலிகைகள் இவற்றின் அருமை பெருமைகளையெல்லாம் எழுதியும் பேசியும் வந்தார். இதனால் சித்த மருத்துவம் சிறப்புற்றது. தாசர் சித்தரானார். சித்த மருத்துவ மாண்பை விளக்கும் சஞ்சிகையாக 'அமுது' என்ற இதழ் சென்ற பத்து ஆண்டுகளாக அன்னாரால் சிறந்து நடந்து வருகிறது.

அவரது தயாரிப்பான 'கக்குவான்'—என்ற இருமல் நிவாரணி சிங்கப்பூர், மலேயா, இலங்கை வரை புகழ் பெற்றதாகும். அம்மட்டோ அவர் செய்தவை? எண்ணில் கணக்கிலடங்கா. ஆண்டு தோறும் தமிழகப் பகுதிகளில் மாநாடுகள் கூட்டி சித்த மருத்துவக் கலை வளர வழிகோலினார். இவரது சலியா உழைப்பினைக் கண்ட தமிழ்நாடு மருத்துவச் சங்கம் சென்ற ஆண்டு இவருக்குப் பொன்னாடை போர்த்திப் பெருமை கொண்டது.

**அவரது தொண்டு :**—பள்ளிகளை நிறுவினார்; கூட்டுறவுச் சங்கங்களை நிறுவினார்; தாசர்புரத்தில் அச்சாலை அமைத்தார்; மத வளர்ச்சி ஏடுகள் பல வற்றை நடாத்தினார்; அமுது எனும் இதழைத் தாம் இறக்குமளவும் நடாத்தினார்; பூங்காக்கள் அமைத்தார்; கூட்டுறவுப் பால் பண்ணை நடாத்தினார். கோழிப்பண்ணை கண்டார்; மருந்

துச் செடிகளைப் பயிராக்கினார்; கிராமச் சீர்திருத்தங்கள் பலவற்றைச் செய்தார்; சித்த மருத்துவத்திற்குச் சிறந்த மகத்துவம் அவரால் உண்டாயிற்று. சித்த மருத்துவக் கல்லூரி துவக்கிச் சில ஆண்டுகள் நடாத்தினார். அஞ்சற்பாடம் இன்று வரை அவரிடம் உண்டு. அவரிடம் நற்சான்றிதழ் பெற்றுப் பயன்பெற்ற மருத்துவர் தொகை ஏராளம்.

சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள நாட்டு மருத்துவக் கல்லூரியை அனைவரும் அறிவர். அதை நீக்கிவிட்டு M. B B. S. கல்லூரி ஏற்படுத்தப் பலரும் முயன்றனர். ஆயினும் நம் தாசரின் தளராத உழைப்பினால் அப் பொல்லாத நிலைமாறி சித்த மருத்துவக் கல்லூரியே ஏற்பட வழி ஏற்பட்டது. இதுவும் அவரால் விளைந்த நல்வினையேயாகும். திருநின்றவூர் கோவாபரேடிவ் பாங்கியின் தலைவராகவும் விளங்கி வந்தார். தாசர் பெரும்பள்ளி—துவக்கப்பள்ளி ஆகியவற்றின் பொறுப்பாளரும் அவரேயாவார். பள்ளியின் கட்டிட நிதிக்காக அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் ஏராளம். அனைத்தப் பிள்ளைகள் பலருக்கு அன்புத் தந்தையாக இருந்து காத்தார்.

தமிழகச் சித்த மருத்துவர் சங்கத் தலைவரும் அவரே யாவார்.

**அவரது குணநலன் :**—வல்லெனப் பேசாது மெல்லெனப் பேசுபவர். சத்தமிட்டுப் பேசுவதில் பிரியம் அற்றவர். ஆடம்பர வாழ்வு அற்றவர்;' ஆசிரியர்களிடமும், மாணவர்களிடமும் அவர் காட்டிய அன்பே அன்புதான்; பழக நல்லார். நீண்ட பேச்சுப் பேசார். சொல்லில் மட்டுமன்றிச் செயலிலும் வல்லார். எந்நேரமும் பயனுள்ள வேலைகளையே செய்வார்; எண்ணுவார்.

**நண்பர்கள் :**— தாசருக்கு அரும் பெரும் நண்பர், கோவை அதிசய மனிதர் G. D. நாயுடு ஆவார். அவருக்கு அமெரிக்கா வரை நண்பர்கள் உண்டு. ஆரம்பக்கல்வி ஆசிரியர் திரு. P. வீரராகவன் அவர்களிடம் ஐயாவிற்கு அதிக ஈடுபாடு உண்டு. இன்று சென்னை சட்டமன்றத்துச் சபாநாயகராக விளங்கும் Dr. U. கிருஷ்ணாராவ் அவர்களும், சென்னை மாநில நிலத்துறை அமைச்சர் திரு. மாணிக்கவேலு நாயக்கர் அவர்களும் நம் தாசரின் மாணவர்களே யாவர். இவ்வளவு பெரும் மனிதர்களின் ஆதரவுகளை தமக்கிருந்தும் செருக்குக் கொள்ளாமலும் — அவர்களிடமெல்லாம் அடிக்கடி செல்லாமலும் நீக்காய்வார் போலிருந்த தாசரின் பெருந்தன்மையே பெருந்தன்மை தான்.

**நோய் :**—ஐயா அவர்கள் உள்ள வலி மிக்கவரே யன்றி உடல் வலியிற் சிறந்தவரல்லர். இதய நோய் அவருக்கு அடிக்கடி வருவதுண்டு. இரண்டு நாட்கள் ஓய்வு எடுப்பார். நோய் நோய்பட்டு ஓடும். ஆனால் 1961

ஜூலைத் திங்கள் 3-ம் நாள் மாலை அவருக்குத் திடீரென முகத்து நரம்புகள் புடைத்தெழத் துவங் கின. அந்நோயிலும் அவர் 'வெறிநாய்க் கடி, குப்பைமேனி ஆகியவற்றைப் பற்றிய ஆராய்ச் சிக் கட்டுரைகள்' எழுதினார். அன்று இரவெல்லாம் மூளைக் கேடும் இரத்த நாளங்களின் மிகுதியான துடிப்பால் அவதியுற் றார். மறுநாள் காலை புகைவண்டி நிலையம் வரை தாமே நடந்து சென்று வண்டி ஏறிச் சிகிச்சை பெற வேலூர் சென்றார். வேலூர் ஆஸ்பத்திரியின் உள் நுழையு முன்பே ஐயா அவர்கள் தம் பெரும் பயணத்தைத் துவங்கி விட்டார். 1961-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 4-ம் நாள் செவ் வாய்க்கிழமை முற்பகல் 11 மணி யளவில் இறையடி சேர்ந்தார்.

அவரது பேசா உடல் தாசர் புரம் திரும்பிற்று. மக்கள் வெள் ளமும்-மாணவர் வெள்ளமும் காவிரியும்-கொள்ளிடமும் கலந்த தெனக் கூடிக் கண்கலங்கிக் கதறி அழுத காட்சி என்றும் நெஞ்சை விட்டகலா.

ஐயா அவர்கட்கு மலையென மாலைகள் குவிந்தன. ஜூலைத் திங்கள் 5-ம் நாள் ஐயா அவர் களின் இறுதி ஊர்வலம் நடந் தது. ஐயா அவர்கள் அமரரானார். அந்தோ! சித்த மருத்துவச் சித் தர் மறைந்தார். இல்லை. நம் அகத்துள் நிறைந்தார்.

---

## சிந்தனைக்கு விருந்து

யானையைப் பிடிப்பதற்காகத் தோண்டிய குழிகளைச் செடி கொடி தழைகளால் மறைத்துவைப்பது வழக்கம். அதுபோலத்தான் மனித சமுதாயமும் வாழ்க்கைப் பாதையில் உள்ள மேடுபள்ளங்களை மயக்கமூட்டும் தத்துவ ஞானங்களால் மறைக்கப் பார்க்கிறது.

—காண்டேகர்

நியாயம் நம் பக்கம் இருக்கவேண்டும் என்ற ஆசை எல்லார்க் கும் இருக்கும். ஆனால் நியாயத்தின் பக்கம் நாம் இருக்க வேண்டும் என்ற ஆசை எல்லாருக்கும் இருப்பதில்லை. ஆனால் இருக்கவேண் டும்.

—ரிசர்ட் வேட்லி

இப்போதே விழித்திடு! எழுந்திரு! இன்றேல் என்றென்றும் வீழ்ந்துகிட.

—மில்டன்

# ★ செய்திக் கொத்து ★

## கடவுளுக்கு அதிர்ஷ்டம்!

ஜூனின் முதல் தேதி நடந்த பரிசுப்பத்திர சீட்டுக்குலுக்கலில் வைத்தீஸ்வரன் கோவில் தேவஸ்தானத்துக்கு முதல் பரிசாக ரூபாய் 7500 கிடைத்துள்ளது.

வைத்தீஸ்வரன் கோவிலில் முத்துக்குமாரசாமி எழுந்தருளியுள்ளார். சீர்காழி தாசில்தார் கிருஷ்ணசாமி இத்தகவலைத் தெரிவித்தார்.

## உலகில் பெரும் கோடீஸ்வரிகள்

## இந்திய கப்பல் அதிபர் சுமதிமொரார்ஜி

உலகில் இப்போதுள்ள பணக்கார சீமாட்டிகள் அனைவரிலும் பெரிய பணக்காரர்களாக 10 பேர்கள் பட்டியலை அமெரிக்கா வெளியிட்டுள்ளது.

இந்த கோடீஸ்வரிகள் பட்டியலில் பெரிய இந்திய கப்பல் மானேஜிங் டைக்டரான கடல் ராணி எனப்படும் திருமதி சுமதி மொரார்ஜியும் இடம் பெற்றிருக்கிறார்.

மற்ற பெரும் கோடீஸ்வரிகள் இங்கிலாந்து ராணி, ஹார்லந்து மாஜி ராணி, மினுவில் ஹெறல் காலஞ்சென்ற ஆகாகானின் மனைவி,—பிரிட்டிஷ் இளவரசி மார்க்ரெட்டை மணந்துள்ள புகைப்பட நிபுணரான டோனி ஆர்மஸ்டிராங், ஜோனின் அபிமான தாயாரான ஹெப்பீல்டு கவுண்ட்ஸ், பிரான்சு வீடுகள் முதலாளிவால்டெரோ, சுவிட்ஜர்லந்து சீமாட்டி மார்செல்லி எருன்ஸ்விக்,கிரீஸ் கப்பல் ராணி எனப்படும் மரிக்கா வெனிசிவாஸ் கானடா மர வியாபார மன்னர் என்பவரின் விதவை டோரத்தி கில்லாம், ஸ்பெயின் ஆல்பாட்ச் செல்.

## டிரைவர் இன்றி ஓடும் ரயில்கள் மேற்கு ஜெர்மனியில் முயற்சி

மேற்கு ஜெர்மனியின் மிகப் பெரிய நகரமும் துறைமுகமும் ஆகிய ஹாம்பர்க் நகரின் போக்குவரத்துத் துறையில் ஒரு புதுமை அம்சத்தை சேர்ப்பதற்கு ஹாம்பர்க் போக்குவரத்து ஸ்தாபனம் திட்டமிட்டிருக்கிறது. டிரைவர்கள் இல்லாமல்தொலைகட்டுப்பாடு மூலம் தாமாகவே இயங்கும் இரயில் வண்டிகள் விடுவதற்கு இந்த ஸ்தாபனம் ஏற்பாடு செய்து வருகிறது.

தொலைக் கட்டுப்பாட்டு முறையில் இயங்கும் விளையாட்டு இரயில் வண்டிகளை ஜெர்மன் உற்பத்தியாளர்கள் எத்தனையோ ஆண்டுகளாக தயாரித்து வந்திருக்கிறார்கள். இப்போது இந்த முறையை

உண்மையான இரயில் வண்டிகளில் பயன்படுத்திப் பார்க்கப் போகிறார்கள். பரிசோதனை ரீதியில் விடுவதற்கான இரயில் வண்டிகள் இப்போது தயாராகிக் கொண்டிருக்கின்றன. ஹாம்பர்கின் பாதாள இரயில் பாதைகளில் 75 சதவீதம் வரையில் சுய இயக்கக் கட்டுப்பாட்டு முறைகள் உபயோகத்தில் இருந்து வருகின்றன. இப்போது நகரம் முழுவதிலும், டிரைவர் இல்லாத இரயில் வண்டிகள் விட்டுப் பரிசோதனை நடத்த ஆரம்பித்திருக்கிறார்கள். எல்லா இரயில் வண்டிகளும் ஒரேயொரு மத்திய கட்டுப்பாட்டு நிலையத்திலிருந்து இயக்கப்படும்.

## கறுப்பர் வெள்ளையராகலாம்!

### கிரேக்கப் பெண் டாக்டரின் நவீன வைத்திய சிகிச்சை

கறுப்பர்களை வெள்ளையர்களாக மாற்றுவதற்கான நவீன வைத்திய முறையொன்றை தாம் கண்டுபிடித்துவிட்டதாக கிரேக்க பெண் டாக்டர் ஒருவர் எகிப்திய ரேடியோ, பத்திரிகைகள் மூலம் கடந்த சில நாட்களாக பிரச்சாரம் செய்து வருகிறார். தமது வைத்திய முறை மூலம் நீக்ரோக்களை வரையும் வெள்ளைக்காரர்களாக்க முடியும் என்று ஈவா கிரிஸ் சாந்திஸ் என்ற அப் பெண் டாக்டர் உறுதி கூறினார்.

நீக்ரோக்கள் போன்ற கறுப்புத் தோலுடைய மக்களின் உடலில் "வெண் குஷ்ட கிருமி போன்ற சரும நோய்க் கிருமிகள் சிலவற்றை உட்செலுத்துவதன் மூலம் அவர்களின் தோலை வெண்மையாக்க முடியும் என்றும் 100-க்கு 98 பேர் இச் சிகிச்சை மூலம் வெண் தோலைப் பெற முடியுமெனவும் ஈவா கிரி சாந்திஸ் கூறுகிறார். இந்த வியாதியின் பெயர் 'லூகோடெர் மிடிஸ்' என்பதாகுமென கிரி சாந்திஸ் தெரிவிக்கிறார். இந்த சிகிச்சை செய்து கொள்வதன் மூலம் சிகிச்சை செய்து கொள்வோரின் உடல் நலம் பாதிக்கப்பட்டுவிடாது என்று கிரிசாந்திஸ் குறிப்பிட்டார்.

ஆப்பிரிக்காவிலுள்ள கிரேக்க கிறிஸ்துவ பிரசார ஸ்தாபனங்கள் இந்த வைத்திய முறைக்கு ஆப்பிரிக்காவில் ஆதரவு கிடைக்குமா என்பது குறித்து சர்வே நடத்திவருகின்றன.

கறுப்புத் தோலை வெண்மையாக மாற்றும் இந்த வைத்திய சிகிச்சை எந்த டாக்டரும் சுலபமாகச் செய்து விடமுடியும் என்று கிரிசாந்திஸ் தெரிவித்தார்.

# அடிமையாகப் பிறந்து அறிஞராக உயர்ந்த கார்வர்

அமெரிக்காவில் உள்நாட்டுப் போர் நடந்த காலத்தில் அடிமையாகப் பிறந்த ஜார்ஜ் வாஷிங்டன் கார்வர், தமக்கு ஏற்பட்ட இடையூறுகள் பலவற்றை வென்று அமெரிக்காவை உருவாக்கிய பெரியார்களுள் ஒருவர் ஆனார். இளமையில் அவர் தம் தந்தையை இழந்தார். முன்பு அவரை அடிமையாகக் கொண்டிருந்தவர் அவரை வளர்த்தார். பெயர் கார்வர். அப்பெயர் இவருக்கும் வைக்கப்பட்டது. அது அக்காலத்து வழக்கம். அவரை வளர்த்த கார்வர் அவர் கல்வி பெறுமாறு அவருக்கு ஊக்கமூட்டினார்.

விளையும் பயிர் முளையிலேதெரியும் என்பது போல், அவருக்கு இருந்த அறிவு வேட்கை குழந்தைப் பருவத்திலேயே புலனாயிற்று. பள்ளிக்கூடத்துக்குப் போகுமுன்பே வெப்ஸ்டர் உச்சரிப்புப் புத்தகம் ஒன்றில் உள்ள சொற்களையெல்லாம் அவர் படித்து விட்டார். சமையற்காரராகவும், கோப்பைகழுவுபவராகவும், வீட்டைக் கண்காணிப்பவராகவும் அவர் வேலை செய்து உயர் நிலைப் பள்ளிக் கல்வியை முடித்தார். ஒரு சிறு சலவைக் கடை வைத்துத் தொழில் நடத்தி, அவர் கல்லூரிப் படிப்பை முடித்து 1894-ல் அயோவா மாநிலக் கல்லூரியில் விஞ்ஞானத்தில் பி. ஏ. பட்டம் பெற்றார்.

இந்த நீக்ரோ இளைஞரின் நட்புத்திறனும், நேர்மையும், பலவகைப்பட்ட பரந்த ஆர்வமும் திறமையும் கல்லூரியில் அவருக்குப் பெருஞ் செல்வாக்கை உண்டு பண்ணிவிட்டன. அங்கு இரசாயன ஆய்வுக் கூடத்தில் அவருக்கு ஆசிரியர் பதவியும் கிடைத்தது. அக்காலத்தில் அவருடைய மாணவர்களாக இருந்தவர்களுள் ஒருவர் ஹென்ரி ஏ. வாலஸ், பிற்காலத்தில் அமெரிக்காவின் துணை ஜனாதிபதி ஆனவர்.

கார்வர் விஞ்ஞானத்தில் எம். ஏ. பட்டம் பெற்ற பின் அடுத்த மாநிலமாகிய அலபாமாவுக்கு வந்தார். அடிமையாயிருந்து விடுதலை பெற்ற லீவீஸ் ஆடம்ஸ் சிறிது காலத்துக்கு முன் அங்கு டஸ்கிகி நிலையம் என்னும் கல்லூரியை நிறுவியிருந்தார். 1896-ல் கார்வர் அங்கு வேளாண்மை இரசாயனப் பிரிவு ஒன்றைத் தொடங்கினார். அங்கு தென்மாநிலங்களின் நலனைக் கருதி வேளாண்மைத் துறையில் ஆராய்ச்சி நடத்தினார்.

## மண்வளம் செழிக்க

1900-ம் ஆண்டில் தென்மாநிலங்களில் பருத்தி வேளாண்மை

யைப் பூச்சிகள் அழித்து விட்டன. நிலங்களில் வேறு பயிர் செய்ய வேண்டுமென்று டாக்டர் கார்வர் வலியுறுத்தினார். மண் வளத்தைக் கெடுக்கும் பருத்தியை விடுத்து மண்வளத்தை வளர்க்கும் வேர்க் கடலையும், சர்க்கரை வள்ளிக் கிழங்கும் பயிர் செய்ய வேண்டு மென்று அவர் சொன்னார். அவர் களும் அவ்வாறு செய்தார்கள். அவற்றை உணவாகப் பயன்படுத் திய பின்பும் அவை ஏராளமாக இருந்தன. எனவே அவற்றைப் புதிய முறையில் பயன்படுத்தும் வழிகளை அவர் கண்டுபிடித்தார்.

வேர்க்கடலையைக் கொண்டு, அவர் பால்கட்டி, பால், காபி, மாவு, மை, சாயங்கள், சோப் முதலிய சுமார் 300 பொருள்கள் செய்தார். சர்க்கரை வள்ளிக் கிழங்கிலிருந்து நல்ல உணவுக்கு வேண்டியவையெல்லாம் அவர் செய்தார். அதிலிருந்து மாவு, புளிக்காடி, வெல்லப்பாகு, ரப் பர்கூட அவர்செய்தார். முதல் உலகப்போர் ஏற்பட்ட காலத்தில் கோதுமை கிடைக்கவில்லை. சர்க் கரை வள்ளிக் கிழங்கிலிருந்து செய்யப்பட்ட கார்வர் ரொட்டி அமெரிக்காவில் பல வீடுகளில் உணவாயிற்று. அதற்குஇடையில் பருத்திக்கும் அவர் பல புதிய பயன்கள் கண்டுபிடித்தார். செயற்கை ரப்பர் செய்வதற்கும் சாலை அமைக்கும் பொருள்கள் செய்வதற்கும் அதைப் பயன் படுத்தினார்.

## "வேர்க்கடலை டாக்டர்"

வேர்க்கடலைத் தொழில் ஆண் டுக்குப் பத்து லட்சம் டாலர்த் தொழிலாக வளர்ந்து விட்டது. எனினும், வேளாண்மைப் பொருள்களுக்கு நலம் பயக்கும் சட்டம் இயற்ற அமெரிக்கச்சட்ட சபை 1930-ல் கருதிய போது, வேர்க்கடலையை வேளாண்மைப் பொருள் பட்டியலில் சேர்க்க விரும்பவில்லை. தென்மாநிலங்க ளைச் சேர்ந்த விவசாயிகள் அது பற்றித் தெரிவித்தும் பயன் ஒன் றும் விளையவில்லை. எனவே டாக் டர் கார்வர் ஆவன செய்யவேண்டு மென்று மக்கள் விரும்பினர். ஆதலால், 'வேர்க்கடலை டாக்டர்' எனப்பட்ட கார்வர் அமெரிக்கச் சட்ட மன்றத்தின் முன்னிலையில் தமது "நோயாளியாகிய" வேர்க் கடலைக்காக வழக்காட ஆயத்த மானார்.

சட்ட மன்றத்தில் மசோதா, இறுதி நிலையில் இருந்தது. டாக் டர் கார்வர் சட்ட மன்றத்தில் நின்று "தாழ்மையான வேர்க் கடலை" யிலிருந்து (அவ்வாறு அதைக் குறிப்பது அவரது வழக் கம்) தாம் கண்டு பிடித்துள்ள வியப்பூட்டும் உண்மைகளை எடுத் துரைத்தார். "நான் கைநிறைய வேர்க்கடலையை எடுத்துக் கொண்டு, என்னைப் படைத்தவ ரைநோக்கி, ஏன் வேர்க்கடலை யைப்படைத்தீர்" என்று கேட்கி றேன் அதன்பின் ஏன் என்பதைக் கண்டுபிடிக்க நான் முயற்சிசெய்கி றேன்" என்றார். இரண்டுமணி

நேரம் அவர் பேசினார்; வியப்புக் கடலில் மூழ்கிய நிலையில் சட்ட சபையினர் கேட்டுக் கொண்டிருந்தார்கள். மசோதாவில் முக்கிய பொருள்களில் ஒன்றாக வேர்க்கடலையும் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

## "பொருள் வேண்டேன்"

இவற்றால் அவருக்கு உலகப் புகழ் ஏற்பட்டது. எனினும் டாக்டர் கார்வர் எளிய வாழ்க்கையையே இனிய வாழ்க்கையாகக் கொண்டார். ஏராளமான பொருள் வருவாய் வரும் துறைகளையெல்லாம் வேண்டாம் என்று அவர் தள்ளினார். தாம் கண்டு பிடித்தவை உலகத்திலுள்ள மக்கள் அனைவருக்கும் உரியது என்பது அவரது உறுதியான நம்பிக்கை. "நிலக்கடலையையும் சர்க்கரை வள்ளி கிழங்கையும் படைத்ததற்காகக் கடவுள் பணம் கேட்கவில்லை. நான் செய்வதற்கும் பணம் கேட்க மாட்டேன்" என்று அவர் கூறினார்.

இவரது எளிய வாழ்க்கையும் அரிய சிந்தனையும் மக்களைக் கவர்ந்தன. ஜனாதிபதி பிராங்ளின் டி. ரூஸ்வெல்ட் அவரை மதித்தார்; நாடு முழுவதும் அவரைப் புகழ்ந்தது. 1923-ல் அவர் சிறந்த சாதனைக்காக ஸ்பிங்கார்ன் பதக்கம் பெற்றார்; 1939-ல் ரூஸ்வெல்ட் நினைவுப் பரிசு அவருக்கு வழங்கப்பட்டது. இந்த இரண்டுமே அவர் பெற்றுக்கொள்ள இணங்கியவை. வாழ்க்கை முழுவதும் தாம் ஈட்டியிருந்த பொருள் அனைத்தையும் அதாவது 33 ஆயிரம் டாலரையும் டஸ்கிகி நிலையத்திற்கே அவர் வழங்கினார். அதைக் கொண்டு அங்கு கார்வர் புதுமை ஆராய்ச்சிச் சோதனைக்கூடம் நிறுவப்பட்டுள்ளது.

1945, ஜனவரி 5ல் ஜார்ஜ் வாஷிங்டன் கார்வர் தமது 83-வயதில் இறந்தார். தமது உழைப்பு அமெரிக்கமக்களுக்கும் வேறு பல நாடுகளின் மக்களுக்கும் பயன்படுவதைத் தமது வாழ்நாளில் காணும் பேறுபெற்றவர் அவர்.

—அமெரிக்கன் ரிப்போர்ட்டர்

---

## சிந்தனைக்கு விருந்து

ஒருவரிடம் மட்டும் அடைப்பட்டுக்கிடக்கும் அன்பைப் பின்னர் இருவரிடத்தும் பின்னர் சில உயிர்களிடத்தும் முடிவில் எல்லா உயிர்களிடத்தும் பரப்பும் தன்மை உடையது இல்லறம்.

—திரு. வி. க.

உடல் உறுதி பெறவேண்டுமானால் தேகப் பயிற்சி செய்ய வேண்டும். அதுபோலத்தான் உள்ளம் முழுமை அடைய வேண்டுமானால் கல்விப் பயிற்சி புரிய வேண்டும்.

—ரிச்சர்ட் ஸ்டீல்

# உலகிலேயே அதிகமாக எழுதிய எழுத்தாளன்!

[இரா. அகமழகன்.]

அன்று இப்பாரீசே அவன் அறிவிற்கும், ஆற்றல் தன்மைக்கும் பாராட்டியது! குறிப்பாக ஐரோப்பாக் கண்டம் அவனுக்குப் புகழ்விருந்து படைத்துப் பூரித்தது!

இன்று மட்டுமென்ன...?போற்றப்படாமலா இருக்கிறான்? அறிஞர்களாலும், கலைஞர்களாலும், கவிஞர்களாலும் போற்றப்படுகிறான்! இற்றைக்குத்தொண்ணூறு ஆண்டுகளாகியும், அவன் பெயர் அழியாமல் சாகாவரம் பெற்றுத் திகழ்கிறது!

உலகிலேயே அதிகமாக எழுதிய எழுத்தாளன்! ஆயிரத்து இருநூறு (1200) புத்தகங்கள் எழுதியிருக்கிறான்! எழுதியது மட்டுமல்ல, ஐந்து மில்லியன் டாலர்கள் சம்பாதித்து இருக்கிறான்! இவ்வளவு சம்பாதித்த அவன் தனக்கென்று ஒரு காசும் சேமித்து வைக்கவில்லை.

மக்கள் அவனைக் 'கலையின் சிகரம்' என்று பாராட்டிப் போற்றினார்கள்.

பிரான்சு நாட்டு அதிபர்களின் அந்தப்புரத்திலே நடந்த சீமான், சீமாட்டிகளின் சிருங்கார நாடகங்களையும், அலங்காரங்களையும், அகம்பாவ வெறிக்கூத்துக்களையும் தன் பேனா மூலம் உலகத்திற்குப் படம் பிடித்துக் காட்டினான். தன் நாட்டின் புகழ் பெற்ற சரித்திரத்தை நாடக உருவில் உருவாக்கி, மக்கள் பார்வைக்கு நாடக விருந்து படைத்தான்!

மனிதனின், ஆத்மாவின் மர்மத்தைப் பற்றியோ, சுவையற்ற வாழ்க்கைச் சித்தாந்தத்தைப் பற்றியோ எழுதவில்லை. அதைப் பற்றி அவன் எள்ளளவும் கவலைப் படவுமில்லை.

ஒருநாள் ஆண்டவனையே சுட்டுக் கொல்லத் துப்பாக்கியைக்கையில் எடுத்துக்கொண்டு ஆண்டவன் இருக்கை நோக்கிச் சென்றுவிட்டான்!

இவன்தான் அலெக்சாந்தர் டூமாசு!

1802-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 24-ம் நாளன்று, வில்லர்சு காட்டரட்சு(Villers-Coterets) என்ற கிராமத்தில் பிறந்தான்.

டூமாசு, நெப்போலியனின் குதிரைப்படை வீரன் ஒருவனுக்கும், படைத் தலைவனின் பெண்ணொருத்திக்கும் பிறந்தவன்.

அவனின் தந்தை உலகத்தின் பல பாகங்களையும்சுற்றிப்பார்த்து

வந்த தன் அனுபவங்களையெல்லாம் அவனுக்கெடுத்தோதுவார். தன் நாட்டின் சரித்திரங்களைப் படிக்க ஆர்வமூட்டினார். பேனாவைத் திறம்பட உபயோகிக்கும் உணர்ச்சியையும் ஊக்குவித்தார்.

டோமாசின் தந்தை அவனது நான்காவது வயதில், பல போர்க்களங்களுக்குச் சென்றதால் அவரின் உடல் நலம் குன்றி, நோய் வாய்ப்பட்டு இறந்துவிட்டார்.

தன் தந்தை இறந்தபோது, தன் தந்தையை ஆண்டவன் பரலோகத்திற்கு அழைத்துப் போய் விட்டாரென்றும், அவர் இனி திரும்பவும் வரமாட்டார் என்றும் அவன் உறவினர் அவனிடம் சொன்னார்கள். இதைக் கேட்ட டோமாசு துப்பாக்கி ஒன்றைத் தூக்கிக் கொண்டு ஓடினான். இதைக் கண்ட அவனின் தாய் "எங்கே துப்பாக்கி தூக்கிக் கொண்டு போகிறாய்" என்று அவனைக் கேட்க, "நான் பரலோகத்திற்குப் போகிறேன்" என்றான். "எதற்காகக் கண்ணே!" என்று மீண்டும் அவன் தாய் கேட்டதற்கு, "என் தந்தையை ஏன் அந்த ஆண்டவன் கொன்றான்? எனவே ஆண்டவனைச் சுட்டுக் கொல்லப் போகிறேன்" என்றானாம்.

சிறு வயதில் அவன் வயதானவர்களுடன் பழகி அவர்களுடன் காடுகளுக்குப் போய்வருவான். இவர்களின் நட்பின் விளைவாக குதிரைச்சவாரி, மிருகங்களை வேட்டையாடுதல், துப்பாக்கியால் சுடுதல், கத்திச் சண்டை போடுதல் இவ்வகையான செயல்களில் மிகவும் ஈடுபாடுடையவனாக இருந்ததால் இவனுக்குக் கல்வியின் மேல் நாட்டம் செல்லவில்லை. பிள்ளையின் இந்நிலையைக் கண்டு தாய் மிகவும் வருந்தினாள்.

அவன் தந்தை இறந்த பிறகு அவர்களுக்கு வறுமை சூழ்ந்து கொண்டது. இதை அவன் தாய் நினைத்து மிகவும் வருந்துவாள். தன் மகனை எப்படியாவது கொஞ்சம் படிக்கவைக்க வேண்டும் என்று கருதிக் கொண்டிருந்த நேரத்தில், டோமாசு தான் வேட்டையாடிய பட்சிகளையும், கனிகளையும் கொண்டுவந்து தன் தாயிடம் கொடுத்தான். மகனின் இச்செயலைக் கண்டு கண்ணீர் மல்கினாள் தாய்.

அவளின் உறவினரான ஒரு பாதிரி இறந்த சமயம் அவளுக்கு 1500 பிராங்குகள் கிடைத்தது. அது அப்போது அவர்களுக்கு பேருதவியாய் இருந்தது. தன் மகனையும் பாதிரியாக்க வேண்டும் என்ற எண்ணம் அவள் மனதில் ஊசலாடிக்கொண்டிருந்தது. இதை கேட்டு டோமாசு பாதிரி வாழ்க்கை பிடிக்காதவனாய் மூன்று நாட்களாக வீட்டிற்கு வராமல் காட்டிலேயே தங்கிவிட்டான். பிறகு, தன் தாய் அவனுக்குச் சில புத்திமதிகளைச் சொல்லி, பள்ளிக்குப் போகுமாறு செய்தாள்.

நன்றாகப் புத்தகங்களைப் படிக்கக் கூடிய நிலையைப் பெற்றான். முதல்

முதலாக பஃபான் (Buffon) என்பவர் எழுதிய நூலையும், பைபிலையும், ராபின்சன் குரூசோ, ஆயிரத்து ஓர் இரவு கதைகள்— இவைகளை மிகவும் ஆவலுடன் படித்துவந்தான். ஆயிரத்தோர் இரவு கதைகளில் பொதிந்திருந்த இன்பம் அவன் மனதை ஈர்த்து, அவனின் கற்பனைத்திறனுக்கு வலுவூட்டியது.

சேக்சுபியர், கார்னீலி, மௌர்பி பால்சாக், டிக்கன்சு முதலிய எழுத்தாளர்களைப்போலவே டூமாசும் தன் பதினைந்தாவது வயதில் மேய்ட்டர் மென்சன் என்னும் வக்கீலிடம் குமஸ்தா வேலை செய்து வந்தான். ஆயினும் அந்த வேலையில் அவனுக்கு விருப்பமில்லை.

இங்கு பணி புரிந்து கொண்டே முதல் முதலில் அடாலே டால்வின் (Adele Dalvine) என்ற பெண்ணைக் காதலித்தான். இவன் வேலை நேரம் போக தன்னை அலங்கரித்துக் கொண்டு காதலியிடம் போய்விடுவான்.

1818-ம் ஆண்டு டூமாசு இத்தகைய வாழ்க்கையிலிருக்கும்போது அடோல்ப் லூவன் (Adolphe Leu-ven) என்றவனின் நட்பு அவனுக்குக் கிடைத்தது. லூவன் அவன் வாழ்க்கையையே மாற்றியமைத்து, அவனுக்கு இலக்கியப் பசியை உண்டாக்கினான்; சில சமயங்களில் எழுத்துப் பயிற்சியும் கொடுத்து வந்தான். ஆங்கில மகா கவி சேக்சுபியரின் ஆம்லெட் (Ham-lel) என்ற நாடகத்தை ஒரு சமயம் பார்த்தான். அந்நாடகம் அவன் மனதைக் கவர்ந்தது. அதற்குப் பிறகு, அவன் கதே, சில்லர், பைரன், ஸ்காட் முதலியவர்களின் எழுத்துக்களைப் படித்துவந்தான்.

1823-ம் ஆண்டு பாரிசு பட்டினத்திற்குப் புறப்பட்டான்; அவனின் அழகிய கையெழுத்துதான் அங்கே அவனுக்கு வேலை தேடி தந்தது. இவ்வேலையின் மூலமாகக் கிடைத்த பணத்தை வைத்துக் கொண்டு தன் வாழ்க்கை வண்டியை ஓட்டினான். அவன் வசித்து வந்த அறையின் எதிர் வீட்டில் கணவனைப் பிரிந்து வாழ்ந்து வந்த காதரின்லிபே (Catherine Libev) என்ற பெண்ணைக் காதலித்து இருவரும் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் இருவருக்கும் அடுத்த ஆண்டே ஒரு ஆண் குழந்தை பிறந்தது. எழுத்தாளர்களுக்கு அவர்களின் எழுத்துக்களை அழகாக எழுதிக்கொடுத்து மேலும் நிரம்பப் பணம் திரட்டினான்.

டூமாசு, தானே நாடகங்கள் எழுத வேண்டுமென்று விரும்பினான். எழுத ஆரம்பிப்பதற்கு முன்பாக நிறையப் புத்தகங்களைப் படிக்க வேண்டுமென்று உணர்ந்தான். இரவெல்லாம் கண் விழித்துப் படித்துக் கொண்டேயிருப்பான். சூரியன் உதயமாவதுங் கூட அவனுக்குத் தெரியாது. அந்த அளவுக்கு அவன் ஊன்றிப் படித்து வந்தான். அவன் அதிக ஞாபக சக்தியுடையவன். கற்பது

என்றைக்கும் முடிவற்றது என்ற எண்ணம் உடையவன்.

முதன் முதலாக அவன் எழுதிய நாடகம் "மூன்றும் என்றி" (HenryIII) ஆகும். அந்நாடகத்திற்கு அவனுக்கு அமோகமான வெற்றி கிடைத்தது. நாடகம் எல்லோராலும் புகழப்பட்டது. அவனைப் புகழும் பொருளும் அணைத்துக் கொண்டன.

இரண்டாவதாக 'அண்டோனி' என்ற நாடகத்தை எழுதினன். இந்நாடகம் மேலும் புகழைத் தேடித்தந்தது. இந்த நாடகத்தைப் பார்த்தவர்கள் மகிழ்ச்சியின் பெருக்கால் டூமாசைத் தூக்கி ஊர்வலம் வந்தார்கள்.

அவன் பல நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்து வந்தான். சுற்றுப் பிரயாணங்களில்கூட அவன் நிறைய சரித்திர நூல்களைப் படித்தும்வந்தான்—எழுதிக் கொண்டுமிருந்தான்.

"மூன்று கத்தி வீரர்கள்" என்னும் நாவல் பாரீசு பட்டினத்தின் பத்திரிகை ஒன்றில் தொடர்ச்சியாக வந்து கொண்டிருந்தது. மூலை முடுக்குகளிலுள்ள மக்களெல்லாம் அந்நாவலைப் படித்து மகிழ்ந்து அவனைப் பாராட்டினர். அவனின் புகழைக் கண்டு பொறாமை அடைந்தவர்கள் கூட இதைப் படித்துவிட்டு அவனை மனமாரப் புகழ்ந்தனர்.

விக்டர்யூகோ அவர்கள் அவனை "பிரான்சு நாட்டையோ அல்லது ஐரோப்பா நாட்டையோ சேர்ந்தவனல்ல, உலகத்தைச் சேர்ந்தவன்" என்று அவனை உலகத்தின் பொது சொத்தாகக் கூறுகிறார்.

டூமாசு எழுதுகின்ற பத்திரிகாசிரியருக்கு, அன்றாடம் மக்கள் 'டூமாசின் தொடர் கதைகள் தொடர்ந்து இடம் பெறவேண்டுமென்று' எழுதிய கடிதங்கள் மலைபோல் குவிந்தன!

அவனின் புகழ் மேலும் மேலும் பெருகிக்கொண்டேயிருந்தது. மற்ற எழுத்தாளர்கள் எழுதுவதை மக்களால் படிக்கப்பட்டு அவ்வளவாக புகழப்படவில்லை! ஆனால் டூமாசின் பெயரும் எழுத்தும் பெரும் புகழ் அடைந்தன. பாரீசு பட்டினமே அவனைப் புகழ்ந்து மகிழ்ந்தது. 'பாரீசின் முடிசூடா மன்னன்' என்று மக்கள், அவனை அழைத்தார்கள். பொறாமை கொண்ட சிலர் அவனைப் பலவாறாகக் கூறி அவனுக்கு இழுக்குத் தேட முயன்றனர். அவன் பலரைத் தன் வீட்டில் வைத்துப் பணம் கொடுத்து எழுதச் சொல்கிறான் என்றும்கூறினர்.

டூமாசு சில வேளைகளில் உணவையும் உறக்கத்தையும் மறந்து எழுதிக் கொண்டிருப்பான். அப்போது யாராவது நண்பர்கள் வந்து விட்டால் இடது கையால் வணக்கம் செய்துவிட்டு வலது கையால் எழுதிக்கொண்டேயிருப்பான்.

அவன் நீலநிற தாள்களில்தான் தனது நாவல்களை எழுதுவான். இதற்கு ஒரு பேனா உபயோகிப்பான். கவிதைகளை மஞ்சள் நிறத் தாள்களில் எழுதுவான். இதற்கொரு தனியான பேனா. பத்திரிகைக்குக் கட்டுரைகள் எழுதும் பொழுது ரோசாநிறத்தாள்களில் எழுதுவான். எதையும் நீல நிற மையினால் மட்டும் எழுதமாட்டான். கீழே படுத்தவாறுதான் நாடகங்கள் எழுதுவான். ஆயிரத்து இருநூறு புத்தகங்களை எழுதினான். அடிக்கடி நிறையப் பிரயாணங்கள் செய்திருக்கிறான். பிரயாணத்திலும் எழுதிக் கொண்டேயிருந்தான்.

டூமாசுக்கு வயதாக ஆக இளம் வனிதைகளை நாடினான். எழுதிக் கொண்டேயிருப்பான். உடனே சென்று ஒரு இளம் வனிதையின் அதரங்களோடு தன் இதழ்களை வைத்துப் பொருத்துவான். காதல் தடாகத்தில் மூழ்கிவிடுவான். இதனால் தனது மகனின் வெறுப்பையும் பெற்றான்.

ஒரு நாள் பகல் பன்னிரண்டு மணிக்கு டூமாசைக் காணுவதற்காக அவன் நண்பனொருவன் வந்தான். அப்போது அந்த அறையில், டூமாசு எழில் வாய்ந்த இளம்பெண்களின் நடுவில் காதல் மயக்கத்தில் வீழ்ந்து கிடந்தான். அவன் மடியிலே ஒருவள் உட்கார்ந்து கொஞ்சிக் குலாவி அவன் கால்களை வருடிக் கொண்டிருந்தாள். மற்றொருவள், அவன் தடித்த உதடுகளில் தன் கொவ்வைக் கனி இதழ்களைப் பொருத்திப் பொருத்திப் பார்த்துக் கொண்டிருந்தாள். இன்னும் சில பெண்கள் அரை நிர்வாண கோலத்தில் கிடந்தனர்.

அவன் சென்ற இடங்களிலெல்லாம் அவனுக்கு அமோகமான வரவேற்பு கிடைத்தது! ருசியாவிலும் பிரமாதமான வரவேற்பு அளிக்கப்பட்டது! தனக்கென்று ஒரு தனி நாடக அரங்கம் அமைத்துக் கொண்டான்.

டூமாசின் மாளிகையில் அவனுக்கே தெரியாத எத்தனையோ தண்ட பிண்டங்கள் வசித்து வந்தனர். டூமாசு பணக்காரனாக ஆக வேண்டும் என்று நினைத்திருந்தால் யூகோவைப் போல கோடீசுவரனாக இருந்திருப்பான். அப்படி அவன் எண்ணவுமில்லை! வாழவுமில்லை!

எத்தனையோ பெண்கள் அவன் வாழ்க்கைப் பாதையில் குறுக்கிட்டனர். அவனோடு வாழ வந்த பெண்களெல்லாம் கொஞ்சகாலம் வாழ்ந்து பிறகு சண்டையிட்டுச் செல்லும்போது அவனுடைய பொருள்களையெல்லாம் எடுத்துக் கொண்டு போய் விடுவார்கள். ஒருசமயம் அதுபோன்று செய்தவளைப் பார்த்து, "எல்லாவற்றையும் எடுத்துப்போ! ஆனால் என் மேஜையை மட்டும் விட்டுப் போ" என்றானாம். அவன் கடும் உழைப்பின் பயனாகத் திரட்டிய பொருளனைத்தையும் மற்றவர்கள்

அட்டைகளைப் போல் உறிஞ்சினர்.

அவன் வாழ்க்கையில் அவன் சாராயம் குடித்தது கிடையாது! சிகரெட்டும் குடித்தது கிடையாது! காப்பியும் குடிக்கமாட்டான்! இது பெருத்த வியப்புக்குரியது.

அவனது அறுபத்து நான்காவது வயதில் இருபத்துக்கும் குறைந்த ஓர் இளம் பெண்ணுடன் வாழ்ந்தான். இதைக் கண்டு பாரீசு பட்டினமே எள்ளி நகையாடியது.

டூமாசுக்கிருந்த பணமும் புகழும் இருந்த இடம் தெரியாமல் ஓடி மறைந்து விட்டன. எனவே, அவன் துணிமணிகளை விற்று வீட்டு வாடகை கொடுத்தான்.

உலக மேதையான பெர்னார்டு சா, "டூமாசு கலையின் சிகரம்" என்று போற்றியிருக்கிறார். இத்தாலியின் சரித்திரத்தில் மங்காப் புகழ்பெற்ற கரிபால்டியின் நண்பன் டூமாசு.

காதல் விவகாரங்களில் தலையிட்டு, முப்பது தடவை அதைப் பற்றிச் சண்டைபோட அவனுக்கு நேரமிருந்தாலும், அவன் எழுதியதைப் படிக்க அவனுக்கு நேரம் இருந்தது கிடையாது.

ஒரு நாள் அவனிருந்தபக்கத்து அறையில் ஆத்மாவின் 'அமரத் தன்மையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அதைக் கேட்டு டூமாசு, "ஆத்மா! மறுபிறவி! அதை நான் நம்பமாட்டேன். நாம் முன்னே வாழ்ந்ததைப் பற்றி ஒன்றும் தெரியாமலிருக்க, இரண்டாவது வாழ்க்கை பயனற்றது. முன்னால் வாழ்ந்த விதம்பற்றித் தெரியாதிருக்க, ஒரு வாழ்வுக்கும், மறு வாழ்வுக்கும் ஒருவித தொடர்பும் இல்லாமலிருக்க, முன் வாழ்வில் நாம் காதலித்தவரை, நேசித்தவரை மறக்க வேண்டியிருக்க, மறு வாழ்வு பயனற்றது" என்றான்.

மங்கையரின் செம்பவள அதரங்களைச்சுவைத்து சுவைத்து எழுதினான். கனி மொழி மாதர்களின் அணைப்பில்தான் கற்பனை ஊற்றெடுத்ததாம் இக்கலைஞனுக்கு! இதை அவனே ஒப்புக் கொள்ளும் முறையில் தெள்ளத் தெளிவாக எழுதியுள்ளான்.

1870-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 5-ம் நாளன்று மீளா உறக்கத்தில் ஆழ்ந்தான் இப்புகழ் பெற்ற கலைஞன்.

இவ்வெழுத்தாளன் செத்தும் சாகாவரம் பெற்றுத் திகழ்கிறான்.

—'திராவிடன்'

# நண்பகல் உணவுத் திட்டம்

[''நம் நாடு'' நாளிதழில் 30-6-61 அன்று வெளியான தலையங்கக்கட்டுரை இது:]

பள்ளிகளில் பகலுணவு அளிக்கும் திட்டத்தை முதன்முதலில் செயல்படுத்தி, இந்தியத் துணைக் கண்டத்துக்கே வழிகாட்டியிருக்கிறது தமிழ்நாடு—என்று, பெருமையாகப் பேசப்படுகிறது. இந்தப் பெருமை தமிழ்நாட்டுக்குக் கிடைத்ததால் மகிழும் மற்றவர்களைப்போலவே நாமும் மகிழ்ச்சி யடைகிறோம். இத்திட்டம், செம்மையாகச் செயல்பட்டு, உரிய பலனை அளிக்க வேண்டுமென்பது தான் நமது பேரவா.

இல்லாமையும் அறியாமையும் மிகுந்துள்ள இந்த நாட்டில், எல்லோரும் கல்வி கற்றுப் பயன் அடைய இந்தத் திட்டம் ஓரளவுக்குப் பலன் தரும் என்பதில் யாருக்கும் ஐயமிருக்க முடியாது.

செவிக்குணவு அளிக்கும் பள்ளிகளில் வயிற்றுக்கும் ஒருவேளை உணவளித்தால், வறியோர்க் கெல்லாம் கல்வியின் வாடை வீசும் என்ற விழுமிய நோக்கத்தோடு துவங்கப்பட்டதுதான் இந்த நண்பகல் உணவளிப்புத் திட்டம். இந்த நோக்கம் உரிய பலனைத் தரத்தக்க அளவில் செயல்படுத்தப்படுகின்றதா என்று ஆய்ந்து பார்ப்பது இன்றியமையாததாகும்.

பள்ளி நண்பகல் உணவளிப்புத் திட்டம், மற்றும் ஏனைய பள்ளி வளர்ச்சித் திட்டங்களை ஆராய்வதற்காக அரசினரால் ஓர் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவினர், பல்வேறு பள்ளிகளுக்கும் சென்று, திட்டங்கள் செயற்படுத்தப்படும் விதத்தை நேரடியாகக் கண்டு தங்கள் கருத்துக்களையும் பரிந்துரைகளையும் அறிக்கையாகத் தொகுத்து அரசினரிடம் அளித்துள்ளனர். அந்த அறிக்கையில் அவர்கள் தெரிவித்துள்ள விவரங்களை நோக்குமிடத்து, நண்பகல் உணவுத் திட்டம், அதன் நோக்கத்திற்கே மாறான முறையில் செயற்படுத்தப்பட்டு வருவது தெரியவருகிறது.

ஏழை மாணவர்களின் பெயரைச் சொல்லி, பணம் வசூலித்து பொய்க் கணக்குக்காட்டிவிட்டு அந்தப் பணத்தை ஏப்பம்விடும் பெருச்சாளிகள் பல பள்ளிகளில் நிறைந்திருப்பதாக, ஆய்வுக் குழுவினர் அறிக்கை மூலம் புலனாகிறது.

குழுவினர் பல்வேறு மாவட்டங்களிலுமுள்ள அறுநூறுக்கு மேற்பட்ட பள்ளிகளுக்குச் சென்றிருக்கின்றனர். அவற்றில் ஏதாவது ஒருவழியில் ஊழல்கள் காணப்படுவதை, அவர்கள் கண்டறிந்திருக்கின்றனர்.

இந்த நண்பகல் உணவு அளிப்பதற்காக ஒரு மாணவருக்கு 10 காசுவீதம் செலவிடவேண்டும். இதில் அரசினர் 6 காசு தருவர்; பொதுமக்களிடமிருந்து 4 காசு நன்கொடை மூலம் வசூலித்துக் கொள்ளவேண்டும்—என்பது திட்டம். அதன்படி பல பள்ளிகளில் அரசினரிடமிருந்து அதிக மான்யம்பெறும் நோக்கத்துடன் பொது நன்கொடை வசூல் தொகையையும், உண்ணும் மாணவர்களின் எண்ணிக்கையையும் கூடுதலாகக் காட்டிப் பொய்க்கணக்கு எழுதி, மோசடிகள் நடத்தப்பட்டிருக்கின்றன. இன்னும் சில பள்ளிகளில் பதிவேடுகளே இல்லையாம்! இன்னும் சில பள்ளிகளில், பொய்க் கணக்கு என்று நம்பமுடியாத அளவுக்குக் கச்சிதமாகக் கணக்கு எழுதிவைக்கப் பட்டுள்ளதாம். ஏட்டிலிருப்பதையும், நடைமுறையையும் ஒப்பிட்டுப்பார்த்த போது பல ஊழல்கள் வெளிப்பட்டனவாம். மேலும், மாணவர்கட்கு உண்மையாக அளிக்கப்படும் உணவும் 10 காசு பெறுமானமுள்ளதாக இல்லையாம். அந்தப் பத்துக் காசிலும் 2 அல்லது 3 காசு மிச்சம் பிடித்து விடுகின்றனராம்.

இவ்வளவு ஊழல்கள் நிரம்பியுள்ள திட்டத்தை வைத்துக் கொண்டுதான் தமிழ்நாட்டு அரசினர், 'ஏழை மாணவர்கட்கு உணவளிக்கிறோம்: இதனால் படிப்பவர்கள் தொகை பலமடங்காகப் பெருகியிருக்கிறது' என்று பறைசாற்றி வருகிறார்கள். குறிப்பாக, முதலமைச்சர் காமராசர், 'நான்தான் ஏழை மாணவர்கட்கு உணவளிக்கிறேன்' என்று வாய் கூசாமல் பேசி வருகிறார். உணவளிப்பவர் யார் என்பது ஒருபுறமிருக்கட்டும்; உணவளிப்புத் திட்டம் யாருக்குப் பலனளிக்கிறது என்பதை முதலில் அறிந்துகொள்ள வேண்டும்.

இதுவரை மேற்சொன்னபடி சில சுரண்டல் பெருச்சாளிகள் தயாரித்துக் காட்டிய பொய்க் கணக்கின் அடிப்படையில்தான் பள்ளி செல்லும் மாணவர்கள் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது என்று அரசினரும் புள்ளிவிவரம் தந்திருக்கின்றனர் என்பது தெரியவருகிறது.

நண்பகல் உணவுத் திட்டம் இந்த நிலையில் உள்ளது. பள்ளிச் சீரமைப்பு மாநாடு, சீருடை வழங்கு விழா என்றெல்லாம் கூறப்படும் திட்டங்களும் இப்படித்தான் செயல்படக் கூடுமோ என்று கூட பொதுமக்கள் ஐயுறுமலிருக்குமாறு அரசினர் ஆவனசெய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

ஏழைகளுக்குக் கல்வியும் உணவும் அளிக்கும் இந்த நல்ல காரியத்திலும், சுரண்டல் நடத்திவரும் சுயநலக் கும்பலை உடனடியாகக் கண்டுபிடித்து, தக்க தண்டனை அளிக்கவேண்டும். மேலும் இத்தகைய ஊழல்கள் ஏற்படாதவாறு தடுத்து நிறுத்த வேண்டும்.

வெறும் ஏட்டுத் திட்டங்களை மட்டும் காட்டி நாட்டு மக்களிடம் நற்பெயர் வாங்கிவிடலாம் என்று அரசினரும், ஆளுங்கட்சியினரும் நம்பியிருப்பார்களேயானால், அது நாட்டுக்குச் செய்யும் பெரும் துரோகமாகும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

நண்பகலுணவுத் திட்டம், பள்ளிச் சீரமைப்புத் திட்டம், சீருடை வழங்கும் திட்டம் என்பனவற்றின் பேரால், நன்கொடைகள் வசூலிக்கப் பள்ளி ஆசிரியர்களை ஏவுவதும், பெற்றோர்களிடம் கட்டாயமாக வசூல் செய்யச் சொல்லுவதும், கல்வி வளர்ச்சிக்கு ஏற்றதல்ல. இதனால், எதிர்பார்ப்பதற்கு மாறான பலனே கிட்டும் என்பதையும் நினைவூட்டுகிறோம்.

இத்திட்டங்களெல்லாம் நல்ல நோக்கமுடையவைதான் என்றாலும், செயல்படும் விதத்தைப் பொறுத்தே இவற்றின் வெற்றி தோல்விகள் இருக்கின்றன. ஆளுங்கட்சியின் தேர்தல் வேட்டைக்காகவே இத்திட்டங்கள் உருவாக்கப்பட்டனவோ என்ற ஐயம் மக்கள் மனத்தில் எழாதவாறு, அரசினரும் நடந்து கொள்ள வேண்டும்.

# ஏழைமாணவர்கட்கு உணவளிக்கும் திட்டத்தின்பேரால் 'சுரண்டல்'!

---

### ஏமாற்று, பொய்க்கணக்கு ஊழல்கள்

---

### ஆய்வுக்குழு வெளியிடும் தகவல்கள்

பள்ளிகளில் நண்பகல் உணவுத்திட்டம் உள்ளிட்ட பள்ளி வளர்ச்சித் திட்டங்களை ஆராய்வதற்கென அமைக்கப்பட்டிருந்த குழு, சில பரிந்துரைகளைச் செய்திருக்கிறது.

நண்பகல் உணவுத் திட்டம்பற்றிக் குழு நேரிடையாகக் கண்ட சில ஒழுங்கீனங்களை அது எடுத்துக் காட்டியிருக்கிறது.

தமிழகத்தில் நண்பகல் உணவுத்திட்டம் அமுலாகும் சுமார் 600 பள்ளிகளுக்குக் குழு சென்று பார்த்திருக்கிறது.

அந்தப் பள்ளிகளில் பெரும்பாலானவை, ஏதாவது ஒரு வழியில் அரசாங்கத்தையும், பொதுமக்களையும் ஏமாற்றும்விதத்தில்

பொய்க் கணக்கு எழுதியிருக்கின்றனர் என்று குழு சுட்டிக்காட்டியிருக்கிறது.

"அரசாங்க மானியத் தொகையை அதிகமாகப் பெறும் பொருட்டு நன்கொடைக் கணக்குகள் தயாரிக்கப் பட்டுள்ளன; நண்பகல் உணவு பெறக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையிலும் பொய்யான விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன" என்றும் குழு கூறியிருக்கிறது.

"உணவுக்கான சாமான்கள் வாங்குவதிலும் பொய் ரசீதுகள் பல இடங்களில் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. பொய்க் கணக்கு என்ற ஐயம் எழாதபடி சில இடங்களில் கச்சிதமாகக் கணக்கு தயாரிக்கப்பட்டிருக்கிறது. சில பள்ளிகளில் எந்தவிதப் பதிவேடுகளும் வைக்கப்பட்டிருக்கவில்லை" என்றும் குழு குறிப்பிட்டிருக்கிறது.

முறைப்படி ஒவ்வொரு மாணவனுக்கும் தினசரி 10-காசு பெறுமானமுள்ள உணவு அளிக்கவேண்டும். இதுவே மிகக் குறைவானது. இதிலும் பெரும் ஊழல்கள் நடந்திருக்கின்றன.

"பள்ளி வளர்ச்சித் திட்டங்களுக்கும், நண்பகல் உணவுத் திட்டத்துக்கும் வேண்டிய நன்கொடைகளை வசூலிக்க ஆசிரியர்களை ஈடுபடுத்துவதும் அவ்வளவுக்கு விரும்பத்தக்கதல்ல; ஏனெனில், ஏழை—நடுத்தர மாணவர்களின் தாய் தந்தையர்களிடமிருந்து கூட கட்டாயமாக வசூல்செய்யும் நிலைமை ஏற்படுகிறது" என்றும் குழு கூறியிருக்கிறது.

இத்தகைய திட்டங்களில் காணப்படும் ஊழல்களைப் போக்க வழியொன்றையும் குழு அறிவித்துள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது ஒரு கல்வி அதிகாரியையாவது நியமிக்கவேண்டும் எனக் குழு கருதுகிறது.

அத்துடன் நண்பகல் உணவுத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றும் முழுப் பொறுப்பையும் கல்வி இலாகாவே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் குழு கருதுவதாகத் தெரிகிறது.

---

# அரும்பொருட் களஞ்சியங்கள் ஆற்றும் பணிகள்

"மியூஸியம்—அரும்பொருட் களஞ்சியம்—என்ற சொல்லைக் கேட்டதுமே அமெரிக்காவில் எல்லோருக்கும் உள்ளத்தில் ஓர் இன்பம் பிறக்கிறது. ஏராளமான மக்கள் அந்நாட்டில் அரும் பொருட் களஞ்சியங்களுக்குச் செல்வது போல உலகில் வேறு எங்கும் நிகழ்வதில்லை" என்று பாரிஸ் நகரிலுள்ள புகழ்பெற்ற அரும் பொருட் களஞ்சிய டைரக்டர் ஜார்ஜ் ஸால்ஸ் அண்மையில் கூறினார். இது முற்றும் உண்மை. 5 கோடி மக்களுக்கு மேற்பட்டோர் ஓர் ஆண்டில் அமெரிக்கக் கலைக் களஞ்சியங்களுக்குச் செல்கின்றனர். அமெரிக்காவிலுள்ள ஆயிரத்துக்கு மேற்பட்ட அரும்பொருட் களஞ்சியங்கள் பழங்காலக் கலைத் தொகுப்புகளாக மட்டும் அல்ல, ஊக்கமூட்டும் காட்சிச்சாலைகளாகவும், பல்வகைக் கலை அரங்குகளாகவும் திகழ்கின்றன.

பழங்கால ஓவியங்களும் சிற்பங்களும் மட்டுமல்ல, இன்றைய கலைப் படைப்புகளும் அங்கு உள்ளன. அவற்றில் ஓவியம், சிற்பம், சித்திரம், கலை, புகைப்படம் பற்றிய வகுப்புகளும் நடைபெறுகின்றன. கலைப் பொருள்களை இரவலாகக் கொடுக்கும் நிலையங்களும் உள்ளன. முதலில் அவற்றை இரவலாகப் பெற்று, பின்னர் அவற்றை விலைக்கு வாங்கிக் கொள்ளலாம். இல்லாவிட்டால் திருப்பிக் கொடுத்துவிட்டு, வேறு ஒன்றை அடுத்த மாதத்துக்கு இரவலாகப் பெறலாம்.

வாஷிங்டன் நகரிலுள்ள தேசிய ஓவியக் கூடம் அமெரிக்காவிலுள்ள புகழ் பெற்ற அரும்பொருட்களஞ்சியங்களில் ஒன்று. நிதி இலாகாக் காரியதரிசியாக இருந்த ஆண்டிரூ மெல்லன் அளித்த சில சிறந்த ஓவியங்களைக் கொண்டு அது தொடங்கப்பட்டது. பின்பு சாமுவேல் கிரஸ், செஸ்டர்டேல் ஆகியோரின் ஓவியத் தொகுப்புக்கள் சேர்க்கப்பட்டன. நியூயார்க்கிலுள்ள விட்னி அரும்பொருட் களஞ்சியத்தில் இன்றைய அமெரிக்க ஓவியங்கள் உள்ளன. செல்வக் குடும்பம் ஒன்று அதனை நிறுவியது. நியூயார்க்கிலுள்ள குகன்ஹீம் அரும்பொருட் களஞ்சியம், பிட்ஸ்பர்க் நகரிலுள்ள கார்னகி அரும்பொருட் களஞ்சியம் முதலியவைகளும் பொதுநலம் கருதும் செல்வர் நிறுவியவையே. இன்று பல்வகை நிலைமையில் உள்ளவர்களும், முதியோரும் இளைஞரும், அரும்பொருட் களஞ்சியங்களுக்குச் சென்று கலைச்செல்வங்களைக் கண்டு களிக்கின்றனர்.

கலைப் பொருள்களைக் காண வருவோர் பலர் அவற்றின் வர

லாற்றையும், அவற்றைப்படைத்த கலைஞர்களைப் பற்றிய விவரங்களையும், அவற்றின் தனிச் சிறப்புகளையும் அறிய விரும்புவர். அதற்குப் புதிய முறை ஒன்று கையாளப்படுகிறது.

ஓவியக் கூடத்தில் நுழைந்தவுடன் ஒரு சிறு தொகை கொடுத்து ஒரு சிறு ரேடியோ இரவலாகப் பெறலாம். அதனைக் கழுத்தில் தொங்கவிட்டுக் கொள்ளலாம். பளுவில்லாத ஒரு செவிக்கருவி அதனோடு இணைக்கப்பட்டிருக்கும். அரும்பொருள்களைக் காணும்போது, அப் பொருள்கள் பற்றிய நாடாப் பதிவு செய்த உரை கேட்கும். அடுத்த அறைக்குச் சென்றதும் அங்குள்ளவை பற்றிய பேச்சு கேட்கும்.

அரும்பொருட் களஞ்சியங்களின் அதிகாரிகள் நிகழ்த்தும் சிறப்பு விரிவுரைகளையும் கேட்கலாம். காட்சியிலுள்ள பொருள்களைப் பற்றித் தெரிவிக்கும் துண்டு வெளியீடுகளும் அங்கு இலவசமாகக் கிடைக்கும். அவற்றை வீட்டுக்குக் கொண்டுபோய்ப் பார்க்கலாம். படங்களோடு கூடிய புத்தகங்களை விலைக்கு வாங்கலாம்.

அரும் பொருட் களஞ்சியங்களிலுள்ள கலைப்பொருள்களின் படங்கள் தபால் கார்டு அளவில் வெளியிடப்பட்டுள்ளன. குறைந்த விலைக்கு அவற்றை வாங்கலாம். பெரிய அளவில் உள்ளவற்றைச் சிறிது அதிகமாகப் பணம் கொடுத்து வாங்கலாம். அரும்பொருட் களஞ்சியங்கள் பலவற்றில் பிலிம் ஸ்லைடுகள் விலைக்குக் கிடைக்கும். திரைப் படங்களை இரவலாகப் பெறலாம்.

சில அரும்பொருட் களஞ்சியங்கள் தங்கள் காட்சிப் பொருள்களை டெலிவிஷனில் காட்டுகின்றன. எண்ணிறந்த மக்கள், தங்கள் வீடுகளில் அவற்றைக் காண்கிறார்கள். நியூயார்க்கிலுள்ள மெட்ராப்பாலிட்டன் அரும்பொருட் களஞ்சியம் மேற்கூறியபணி செய்பவற்றுள் முக்கியமானது.

நியூயார்க்கிலுள்ள தற்காலக் கலை மியூசியம் மற்றப் பணிகள் செய்வதுமல்லாமல், இன்றைய கலை பற்றி விரிவுரைகளுக்கும் ஏற்பாடு செய்கின்றன. திரைப் படங்களும்காட்டுகின்றன. அமெரிக்காவில் வீடுகளின் அமைப்பு, தட்டுமுட்டுச் சாமான்கள் முதலியவற்றை அந்த அரும்பொருட் களஞ்சியம் மாற்றியுள்ளது. வீடுகளில் தொங்கும் படங்களிலும் மாறுதல் ஏற்பட்டுள்ளது. அரும்பொருட் களஞ்சியங்களிலுள்ள பொருள்களில் சுமார் மூன்றில் ஒரு பங்கு மற்றநகரங்களிலுள்ள சிறு அரும்பொருள் களஞ்சியங்களுக்கும், வெளி நாடுகளிலுள்ள கலைக் களஞ்சியங்களுக்கும் இரவலாகக் கொடுக்கப்படுகின்றன.

அரும்பொகருட் களஞ்சியங்கள் பல அமெரிக்கப் பொது மக்களுக்கு இன்னிசைத் துறையிலும் பணிபுரிகின்றன. ஆங்காங்குள்ள இசைச் சங்கங்களோடு சேர்ந்து அரும் பொருட் களஞ்சியங்கள்

இன்னிசை அரங்குகள் நடத்துகின்றன.

பல அரும்பொருட் களஞ்சியங்கள் கலைப் பள்ளிகள் நடத்துகின்றன. எனவே உள்ளூர் ஓவியர் வரைந்த ஓவியங்களும், செதுக்கிய சிற்பங்களும் காட்சியில் உள்ளன. அவற்றில் ஸ்டுடியோக்கள் உள்ளன. உள்ளூர் ஓவியரின் வேலைப்பாடுகளை விற்க ஏற்பாடு செய்யும் சங்கமும் உண்டு.

ரிச்மண்டு நகரிலுள்ள வெர்ஜீனியா நுண்கலை மியூசியம் மாநிலம் முழுவதும் அரும்பொருட் காட்சி ஊர்திகளை அனுப்புகிறது. அவ்வாறு அனுப்பும் வேறு பல அரும்பொருட் களஞ்சியங்களும் உள்ளன. கலை பயிலும் இளைஞருக்கு வெர்ஜீனியா அரும்பொருட் களஞ்சியம் கல்வி உபகார நிதிகள் வழங்குகிறது.

சிறுவயதிலேயே பிள்ளைகளுக்குக் கலையைப் பற்றிச் சொல்லிக் கொடுப்பதும் அமெரிக்க அரும்பொருட் களஞ்சியங்களின் வளர்ச்சிக்குத் துணை செய்துள்ளது.

பல்கலைக் கழகங்களிலும்வேறு மேற்படிப்பு நிலையங்களிலும் அரும்பொருட் களஞ்சியங்கள் உள்ளன. ஹார்வர்டு, யேல் முதலிய பல்கலைக் கழகங்களில் மிகச் சிறந்த கலைத் தொகுப்புக்கள் உள்ளன.

---


"ஆரம்பக்கல்வி" ஆபீஸ்.

94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 3-50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-25

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

Form of Certificate of Income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு:

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

# சிரிக்க வைக்கும் திருவள்ளுவர்

(புலவர். துணிகை உலகநாதன்)

'தட்டிக் கேட்க ஆள் இல்லை என்றால் தம்பி சண்டப் பிரசண்டன்' என்பது ஒரு பழமொழி. ஒரு கட்டுப்பாடும் இல்லாமல் தம் மனம் போன போக்கில் நடக்கும் அற்பர்களைப் பற்றித்தான் இப்படிப்பட்ட பழமொழி கூறப்படுகிறது. அற்பர்களைக் 'கீழ் மக்கள்' என்றும் கூறலாம்; கயவர்கள் என்றும் சொல்லலாம். இவர்கள் தன்மையே தனியானது. இவர்களுக்கென்று ஒரு கட்டும் இல்லை; காவலும் இல்லை. இவர்கள் போக்கில் யாரும் குறுக்கிட முடியாது. பாவம், புண்ணியம் என்றால், இவர்கள், 'வினை என்ன விலை?' என்பார்கள். அவைகளைப் பற்றிய கவலையே இவர்களுக்குக் கிடையாது. பாவம் செய்கிறோமோ? புண்ணியம் செய்கிறோமோ? என்ற எண்ணமே இல்லாத கீழ் மக்களே நல்ல புண்ணியவான் என்கிறார் திருவள்ளுவர். இது பாவம், இது புண்ணியம் என்று பார்த்துக் கொண்டே போனால் எத்தனையோ தர்ம சங்கடங்கள் நேரலாம். இந்தத் தொல்லைகள் எல்லாம் இவர்களுக்கு இல்லை என்று கருதிய திருவள்ளுவர் வேடிக்கையாக ஒரு குறளைச் சொல்லுகிறார்:

"நன்று அறிவாரின் கயவர் திருவுடையர்
நெஞ்சத்து அவலம் இலர்"

"இது நல்லது, கெட்டது என்னும் வேற்றுமையை உணர்ந்த மேலோரைக் காட்டிலும் கீழ் மக்களே நன்மை உடையவர்கள். ஏனென்றால் அவற்றைப் பற்றிய கவலையே இவர்களுக்கு இல்லை" என்கிறார்.

இத்துடன் நின்றாரா வள்ளுவர்? கீழ் மக்களை இன்னும் ஒருபடி மேலே உயர்த்தி வைக்கிறார்.

"தேவர் அனையவர் கயவர்" என்று சொல்லுகிறார்! 'என்ன ஆச்சரியம்! தேவர் எங்கே! கயவர் எங்கே? மலைக்கும் மடுவுக்கும் முடிச்சுப்போடுகிறாரே வள்ளுவர்!' என்று சொல்லத் தோன்றலாம். ஆமாம்; 'தேவர் அனையர் கயவர்' என்றே அழுத்தந் திருத்தமாகச் சொல்கிறார். 'எப்படி?' என்று கேட்கிறீர்களா? மனத்திலே கவலை இல்லாதவரைச் சாதாரண மண்ணுலக மக்களாகக் கூறலாமா? விண்ணுலக மக்கள் என்றல்லவா சொல்ல வேண்டும்? அது மட்டுமா? தேவர்கள் தங்கள் மீது அதிகாரம் செலுத்துபவர் ஒருவருமில்லாத பெருமை உடையவர். தாங்கள் நினைத்ததை நினைத்தபடியே செய்யக் கூடியவர்கள். கீழ்மக்கள் மட்டும் என்ன? யாருக்கு அவர்கள் அடங்கி

நடக்கப் போகிறார்கள்? நல்லது கெட்டது ஆராயாமல் தம் விருப்பப்படியே காரியங்களைச் செய்யக் கூடியவர்கள் அல்லவா? இப்போது நீங்களே சொல்லுங்கள்,

"தேவர் அனையர் கயவர்" என்பது சரிதானே? திருவள்ளுவர் சொல்லும் அந்த முழுக் குறளையும் சொல்லுகிறேன்.

**"தேவர் அனையர் கயவர், அவரும்தாம்**
**மேவன செய்தொழுக லான்"**

இப்படிக் கீழ்மக்கள் தேவர்களைப் போன்றவர் என்றும், நல்லது கெட்டதை அறியும் பெரியவர்களை விட மேலானவர்கள் என்றும் நகைச்சுவை தோன்ற வள்ளுவர் கூறும் முறையைப்புலவர்கள் **வஞ்சப் புகழ்ச்சி** என்பார்கள். அதாவது 'புகழ்வது போல் இகழ்த'லாகும்.

**'கயமை'** என்னும் அதிகாரத்தில் இந்த நகைச்சுவை விருந்து காணப்படுகிறது அதே பகுதியில்தான் மேலும் சில செய்திகளைத் திருவள்ளுவர் வேடிக்கையாகச் சொல்லிக் கொண்டே போகிறார்.

ஊரில் யாருக்கும் அடங்காமல் திரியும் மாட்டைப் பட்டி மாடு என்று கூறுவார்கள். கயவரும் அந்தப் பட்டிமாட்டைப் போன்றவர்களே. அவர்கள் தம் விருப்பப்படிப் பிறருக்குத் துன்பம் செய்து கொண்டே திரிவார்கள். தம்மைவிடக் குறைவாகத் துன்பம் செய்தவர்களைக் கண்டால் அவர்களுக்கு ஒரே கொண்டாட்டம். தீங்கு செய்வதில் தம்மைவிட உயர்ந்தவர் ஒருவரும் இல்லை என்ற பெருமையை நினைத்து நினைத்து அவர்கள் இறுமாப்பு அடைவார்களாம். அவர்களிடத்தில் சிறிதும் நன்னடத்தையை எதிர்பார்க்க முடியாது. சில சமயங்களில் அவர்கள் நன்னடத்தை உடையவர்களைப்போல நடிப்பார்கள். காரணம் 'அரசாங்கம் தண்டிக்குமே' என்பதுதான். வேறு ஒன்றும் இல்லை.

**"அகப்பட்டி யாவாரைக் காணின் அவரின்**
**மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ்"**
**"அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம்**
**அவா உண்டேல் உண்டாம் சிறிது"**

அடுத்தபடியாக நம் தெய்வப்புலவர் கயவர்கள் தம்பட்டத்தைப் போன்றவர்கள் என்று சொல்வதும் வேடிக்கையாகவே இருக்கிறது. பறையடிப்பவன் தன்கையினால் பறையை ஓங்கிஅடிக்கிறான். உடனே அந்த ஓசை பலருடைய காதுகளிலும் போய் விழுகிறது. அதைப் போலவே கயவர்கள் எப்படிப்பட்ட இரகசியமான செய்தியாக

இருந்தாலும். அதை அப்படியே பிறரிடம் போய்ச் சொல்லி விட்டுத் தான் மறுவேலை பார்ப்பார்கள். அந்த இரகசியத்தை மனத்தில் வைத்திருப்பது ஏதோ ஒரு பெரிய மூட்டையைத் தலையில் கட்டிக் கொண்டிருப்பது போல இருக்கும். அதை அவிழ்த்துக் கொட்டுகிற வரையில் அவர்களுக்கு நிம்மதி இராது. ஆகையால் அற்பர்களிடம் நம் இரகசியங்களைச் சொல்லக்கூடாது என்பதைக் குறிப்பாகக் கூறியுள்ளார்.

"அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான்"

"எச்சில் கையால் காக்கையும் ஓட்ட மாட்டான்" என்னும் பழமொழியை நீங்கள் கேள்விப் பட்டிருக்கலாம். நிறையச் செல்வம் இருந்தாலும், ஒன்றுக்கும் உதவாத கயவர்களைப் பற்றித்தான் இந்தப் பழமொழி எழுந்தது. கடல் பெரியதுதான். எங்குப் பார்த்தாலும் தண்ணீர். ஆனால் என்ன பயன்? ஒரு சொட்டு நீரும் குடிக்க முடியாது. கயவர்களும் அப்படித்தான். சாப்பிட்டவுடன் கையைக் கழுவாமல் உதறினால் அதில் உள்ள சோற்றுப் பருக்கைகள் கீழே சிந்தும். அவற்றைக் காக்கைகள் தின்றுவிடுமே என்று எண்ணிக் கையை உதற மாட்டார்கள் இந்தக் கருத்தைத் திருவள்ளுவர் கூறும் விதம் நமக்குச் சிரிப்பை அளிக்கிறது.

கயவர்கள் ஈரமான கையை உதறினால் அதில் ஒட்டிய நீர் பிறருக்குப் பயன் பட்டுவிடுமோ என்று எண்ணி ஈரக்கையைக் கூட உதறமாட்டார்கள். இந்த ஈரமற்ற நெஞ்சத்தவரை என்ன செய்ய வேண்டும்? கையை முறுக்கி ஓங்கிக் கன்னத்தில் ஓர் அறை கொடுத்தால்தான் இவர்கள் வழிக்கு வருவார்கள். இப்படிக் கயவர் தம் கன்னத்தில் ஓங்கி அறை கொடுப்பவர்களுக்குத் தான் வேண்டியதெல்லாம் கொடுப்பார்கள்; மற்றவர்க்குக் கொடுக்க மாட்டார்கள்.

"ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும்
கூன்கையர் அல்லா தவர்க்கு."

என்னும் குறளால் நாம் இந்தக் கயவர்களின் உலோபத் தன்மையை அறிகிறோம். நினைக்க நினைக்கச் சிரிப்பு வரும் இந்தக் குறளை ஒட்டி மற்றொரு செய்யுளின் அடிகளும் நினைவுக்கு வருகின்றன:

"பாடுவோர்க் கீயாரே பல்லுதிரத் தாடையிலே
போடுவோர்க் கீவர் பொருள்."

இதே கருத்தைத்தான் ஔவையாரும் 'நல்வழி' என்னும் நூலில் கூறுகிறார். கயவர்கள் தம்மைப் பெற்ற தாய்தந்தை என்றும்

பார்க்க மாட்டார்கள்; பெற்ற குழந்தைகள் என்றும் கவனிக்க மாட்டார்கள்; அருமை நண்பர்கள் என்றும் நினைக்க மாட்டார்கள்; உறவினர்கள் என்றும் எண்ண மாட்டார்கள்; தம்மீது அன்புடையவர் என்றும் மதிக்க மாட்டார்கள். அவர்களைத் தலையார வணங்கி, வாயார வாழ்த்தினாலும் உதவ மாட்டார்கள். உடம்பிலே புண் உண்டாகும்படி நன்றாக உதைப்பவருக்குத்தான் கொடுப்பார்கள்.

பெற்ேறார், பிறந்தார், பெருநட்டார் பேருலகில்
உற்ருர் உகந்தார் எனவேண்டார்-மற்ேறார்
இரணம் கொடுத்தால் இடுவர்; இடாரே
சரணம் கொடுத்தாலும் தான்''

பெரியோர்கள் ஒருவர் தம் குறையைச் சொன்னால் உடனே அவருக்குப் பயன்படுவார்கள். ஆனால் கீழ் மக்களோ கரும்பை ஆலையில் இட்டுச் சாறு பிழிவதைப் போல நன்றாக வருத்தினால்தான் பயன் படுவார்கள்.

“சொல்லப பயன் படுவர் சான்றோர்; கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்''

இப்படி, ‘கயமை’ என்னும் அதிகாரம் முழுவதுமே திருவள்ளுவர் நகைச்சுவையை அமைத்து எழுதியுள்ளார். அதில் கூறப்பட்ட கயமைக் குணங்கள் ஒன்றும் நம்மை அணுகாமல் நீங்கிப் போகட்டும். அது நிற்க, திருக்குறளில் நகைச் சுவை அமைந்த சில அகப்பொருள் பகுதிகளைக் கவனிப்போம்.

அழகான ஒரு சோலை. அறிவும், திருவும், அழகும் நிறைந்த இளைஞன் ஒருவன் அங்கே உள்ள இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்த வண்ணமாகச் செல்கிறான். அவன் எதிரே அழகின் திருவுருவமான நங்கை ஒருத்தி தோன்றுகின்றாள். என்றுமில்லாத ஓர் இன்பவுணர்ச்சி மின்சாரத்தைப்போல் அவன் உள்ளத்தே தோன்றுகிறது. அவளும் அப்படித்தான் ஆகிறாள்.

இளைஞன் அவளுக்குத் தன் மீது அன்பு உண்டோ? என அறிய விரும்புகிறான். அவள் கண்கள் பேசுகின்றன.

அவள் கண்களில் இரண்டு வகையான பார்வைகள் தோன்றுகின்றன. ஒன்று அவள் இயல்பாகப் பார்க்கும் பொதுப் பார்வை. அதனால் தன் மீது அவளுக்கு ஆசை இல்லையோ என்று நினைத்து அவன் ஏங்குகிறான். அவனிடம் காமமாகிய நோய் வளர்கிறது. மீண்டும் அவளைப் பார்க்கிறான். அவள் பார்வையில் அவன் காதல் நிறைவேறும் என்னும் நம்பிக்கை தோன்றுகிறது. அந்தப் பார்வையே அவனது காமமாகிய நோய்க்கு மருந்தும் ஆகின்றது.

இவ்வாறு தன்னை விரும்பிய கட்டழகனைக் காதலி பார்க்கிறாள். ஒருவரை ஒருவர் பார்த்துப் பார்த்து மகிழ்கின்றனர். தலைவன் தன்னை பார்க்கும் போதெல்லாம் தலைவி நாணத்தால் தலைகுனிகிறாள் அதை அறிந்து அவன் அவளைப் பார்க்காதது போல வேறு பக்கமாகத் திரும்புகிறான். அவள் அவனைப் பார்த்துப் புன்சிரிப்புச் சிரிக்கிறாள். அவள் மட்டுமா சிரிக்கிறாள்; நம்மையும் சிரிக்கவைக்கிறாள் என்றே சொல்ல வேண்டும்.

தலைவன் தலைவியின் குறிப்பை அறிந்து கூறும் பாடலாக வள்ளுவர்,

> **"யான்நோக்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக்**
> **தான்நோக்கி மெல்ல நகும்"** **(கால்**

என்று குறிப்பிட்டுள்ளார்.

இப்படிக் காதலித்த இருவரும் இருமனம் ஒன்றித் திருமணம் புரிந்து இல்லறம் என்னும் நல்லறம் புரிகின்றனர். "அத்தான் என்றழைக்காதே நேரந்தான் உண்டா, அத்தை மகளைப் பிரிவானா அப்பிள்ளை" என்று புரட்சிக் கவிஞர் கூறுவது போல அவர்கள் என்றும் பிரியாத இன்ப வாழ்க்கை நடத்துகின்றார்கள்! ஒரு சமயம் தலைவன் பொருள் சம்பாதிப்பதற்காக வெளியூர் சென்று சில நாட்கள் கழித்துத் திரும்புகிறான். திரும்பியவன் தன் மனைவியைக் கண்டான். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ? அவள் பேசவில்லை. நெடுநாட்களாக அவன் பிரிந்திருந்ததை எண்ணி ஊடல் கொண்டாள். அவள் கோபத்தைப் போக்குவதற்காகத் தலைவன் சில தந்திரங்களைக் கையாண்டான் :

மெதுவாக அவள் அருகில் சென்று, "நாம் எல்லோரையும் விட மிகவும் காதல் கொண்டிருக்கிறோம்" என்றான். உடனே அவள் "நீங்கள் யாரைவிட என்மீது காதல்கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டு ஊடல் கொண்டாள். இது என்ன வம்பு! என்று அவன்,

"இந்தப் பிறவியில் நான் உன்னை விட்டுப் பிரியமாட்டேன்" என்றான்.

"அப்படியானால் மறுபிறவியில் பிரிய விரும்புகிறீர்களோ?" என்று கண்ணீர் மழையைப் பொழியலானாள்.

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. மீண்டும் அவளை நெருங்கினான்.

"நான் பிரிந்திருந்த காலத்தில் உன்னை நினைத்தேன்"

"சரி சரி. அப்படியானால் அதற்கு முன் என்னை மறந்து விட்டீர் போங்கள். மறந்தால் அல்லவா நினைத்திருக்க வேண்டும்?" இப்படி ஆணித்தரமாகக் கேட்டாள்.

அன்புடையார் யாராவது ஒருவர் திடீரென்று தும்மினால் அவரை "நூறாண்டு வாழ்க" என்னும் வழக்கம் இன்றும் தமிழர் களிடையே உண்டு. தும்மினால் அன்புடையவர் யாரோ நினைக்கின் றார்கள் என்று சொல்வதும் உண்டு.

அப்படியாவது தன்னை வாழ்த்தட்டுமே என்று நினைத்த கண வன் வேண்டுமென்றே ஒரு தும்மல் தும்மினான். உடனே அவள் "நீங்கள் வாழ்க" என்று வாழ்த்தினாள். "நீங்கள் யாரை நினைத்துத் தும்மினீர்களோ?" என்று சொல்லி அழ ஆரம்பித்தாள்.

"என்ன விபரீதமாகப் போய் விட்டதே" என்று அவன் வந்த தும்மலை அடக்கப் பார்த்தான். "ஓ! ஓ! உமக்கு வேண்டியவர் உம்மை நினைப்பதை மறைப்பதற்காகத்தானே இப்படித் தும்மலை அடக்கப்பார்க்கிறீர்கள்?" என்று கூறி மேலும் அழுதாள்.

ஆனால் நாம் சிரிக்கிறோம். முடிவில் ஊடல் தீர்ந்தது. ஊடலின் பயன் விளைந்தது.

> **வழுத்தினாள் தும்மினேனாக அழித்தழுதாள்**
> **யாருள்ளித் தும்மினீர் என்று;**
> **"தும்முச் செறுப்ப அழுதாள் நுமர் உள்ளல்**
> **எம்மை மறைத்தீரோ என்று"**

இப்படிக் காதல் சுவையுடன் நகைச் சுவையினையும் பின்னிப் பாடிய வள்ளுவர் பெருமானின் இலக்கிய இன்பத்தை என்னென்று புகழ்வது !

> **வள்ளுவன் தந்த தமிழ்மறையைத்—தமிழ்**
> **மாதின் இனிய உயிர் நிலையை**
> **உள்ளம் தெளிவுறப் போற்றுவமே-தினம்**
> **ஓதி உணர்ந்தின் புறுவோமே.**

—கவிமணி.

(இந்நூலாசிரியர் சென்னை வானொலியில் பேசியது)

# பற்களின் பாதுகாப்புக்குப் பத்துக் கட்டளைகள்

டாக்டர் ஏ. பாலசுந்தரம், மதுரை

1. குழந்தைகளின் பற்களைச் சுத்தமாக வைத்துக்கொள்க.

குழந்தை தாயின் கர்ப்பத்தில் இருக்கும் பொழுதே, பற்கள் வலுவாக அமைய ஏற்பாடு செய்ய வேண்டும். தாய் சாப்பிடும் உணவுகளில் போதிய அளவு சுண்ணாம்பு சத்தும் (கால்ஷியம்) வைட்டமின் டி—யும் இருக்க வேண்டும். இவை இரண்டும் பாலில்தான் முக்கியமாகக் கிடைக்கும். ஆகையால் ஒவ்வொரு கர்ப்பிணியும் தினந்தோறும் குறைந்தது அரைச் சேர் பால் சாப்பிட வேண்டும். குழந்தை பிறந்த பிறகு ஒழுங்காகப் பாலும், மீன் எண்ணெய்ச் சொட்டு மருந்தும், ஆரஞ்சு அல்லது தக்காளிப் பழ ரசமும் கொடுக்க வேண்டும். மேற்படி பழ ரசங்களில் வைட்டமின் ஸி மிகுதியாக இருக்கிறது. மீன் எண்ணெயில் வைட்டமின் டி இருக்கிறது. இவ்விரண்டும் இல்லாவிடில், குழந்தைகளின் பற்கள் வலுவாக அமையா. எளிதில் சொத்தை உண்டாகும். ஈறுகளில் அழற்சி ஏற்படும். குழந்தை பிறந்து ஏழு அல்லது எட்டு மாதங்களில் மெல்லுவதற்குக் காரட் கிழங்கு, ரொட்டியின் கடினமான மேல் பாகம், ரோஸ்ட் ரொட்டித் துண்டு, ரஸ்க் முதலியவைகளைக் கொடுப்பது நல்லது. குழந்தையாய் இருக்கும் பொழுதே அவர்கள் பற்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். சாப்பிட்டவுடனே, முக்கியமாக இனிப்புப் பண்டங்கள் சாப்பிட்டவுடனே, குழந்தைகளின் பற்களைப் பெரியோர்கள் சுத்தம் செய்யப் பழக்க வேண்டும். குழந்தைகளின் பற்கள் தற்காலிகமானவை தானே என்று மெத்தனமாக இருந்து விட்டால், தற்காலிகமான பற்களில் ஏற்படும் வியாதி நிரந்தரமான பற்களையும் தாக்கலாம். குழந்தைகள் தங்கள் விரல்களையோ, ரப்பர் சூப்பிகளையோ அடிக்கடி சுவைப்பதினால், குழந்தைகளின் முன்பற்கள் எத்தலாக முளைத்து, முகத்தின் அழகைக் கெடுத்துவிடும். குழந்தைகள் மூச்சுவிடும் பொழுது, வாய் வழியாக மூச்சுவிடாமல் நாசித் துவாரங்களின் வழியாக மூச்சுவிடப் பழக்க வேண்டும். வாய் வழியாக சுவாசிப்பதனால் பற்களின் அமைப்பு கெட்டுவிடும். குழந்தைகள் தூங்கும் பொழுது, பற்களை நற நற வென்று கடிப்பதினால் பற்களுக்கு ஆபத்து ஏற்படலாம். அப்படிப்பட்ட சிறுவர்களை உங்கள் டாக்டரிடம் உடனே காண்பித்து, அவர்களின் மலத்தைச்

சோதித்தறிந்து, பூச்சி மருந்து கொடுக்கச் செய்ய வேண்டும். பற்கள் காலா காலத்தில் வெளிக் கிளம்பாவிட்டாலும், நிரந்தரப் பற்கள் முளைக்காமல் இருந்தாலும், அச்சிறுவர்களை உங்கள் பல் டாக்டரிடம் காண்பித்து, ஆவன செய்ய வேண்டும்.

## 2. நல்ல பற்பொடி அல்லது பற்பசை கொண்டு பல் துலக்குக.

சாதாரணமாக மக்கள் நம்நாட்டில் எருச்சாம்பல், அடுப்புக்கரி, மணல், கடைகளில் விற்கும் பல ரகப் பற்பொடிகளை உபயோகித்து, பல் சுத்தம் செய்வதுண்டு. இவைகள் பற்களுக்கும், ஈறுகளுக்கும் அபாயத்தை விளைவிக்கும். பற்பொடி சொரசொரப்பில்லாததும், அதிக உழைப்பில்லாததுமாக இருக்க வேண்டும். ஏழைகளுக்கேற்ற நல்ல பற்பொடி, உப்பும் நன்றாய்க் கருக்கின உமிக்கரியும் சரி பங்கு சேர்த்து, பொடி செய்து வைத்துக்கொள்ளுதல். அல்லது உப்பு ஒரு பங்கும், சோடா உப்பு மூன்று பங்கும் சேர்த்து வைத்துக்கொள்ளலாம். பிரஷ் உபயோகிப்போர், பிரஷ் முறைப்படி உபயோகிக்க வேண்டும். அது சரியான நிலையில் இருக்க வேண்டும். இதை உங்கள் பல் டாக்டரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். "ஆலும் வேலும் பல்லுக் குறுதி." ஆகையால், மேற்படி குச்சிகளையும் உபயோகிக்கலாம். காலையிலும் இரவு படுக்கைக்குப் போவதற்கு முன்பும் பல் துலக்க வேண்டும்.

## 3. வருடம் ஒரு முறை பல் டாக்டரைக்கொண்டு சோதித்துக்கொள்க.

பல் பரிசோதிப்பு என்பது மேல் நாடுகளில் வழக்கத்தில் இருக்கிறது. நம்நாட்டில் அப்படி இருப்பதாகத் தெரியவில்லை. பற்களிலோ, ஈறுகளிலோ வலி வந்த பிறகு தான் டாக்டரை நாடுகிறோம். இது தவறு. கேடு வந்த பின் நிவாரணம் தேடுவதை விட, கேடு வரு முன்பே பாதுகாத்துக் கொள்ளல் வேண்டும். நீங்கள் அறியாமலே உங்கள் வாயில் அனேக பல் நோய்கள் இருக்கலாம். காலா காலத்தில் கண்டு பிடிக்கப்பட்டால், உங்கள் பற்கள் காப்பாற்றப்படலாம். அவஸ்தை ஏற்படாது. உங்கள் பல் வியாதி உங்கள் உடம்பு முழுவதையும் பாதித்து, அனேக கொடிய விளைவுகளையும் ஏற்படுத்தும் என்பது அறிஞர்கள் கண்டறிந்த உண்மை. ஆக நீங்கள் நீடூழி வாழ உங்கள் விலையுயர்ந்த முத்துப் போன்ற பற்களைக் காப்பாற்றுங்கள். அவைகள் உங்களைக் காப்பாற்றும்.

## 4 பூச்சிப் பற்களின் அரிப்பைத் தடுத்து நிறுத்துங்கள்.

சொத்தைப் பற்கள் அல்லது பூச்சிப்பற்கள் (ஆங்கிலத்தில் "கேரீஸ்" என்பது) சாதாரணமாகப் பலருக்கு ஏற்படுவதுண்டு. இது பற்களில் ஒரு கறுப்பான கறை மாதிரி ஏற்பட்டு, நாளடை

வில் பற்களின் மேற்பூச்சை அரிக்கத் தொடங்குகிறது. இதற்குக் காரணம் பல உண்டு வாயைச் சுத்தமாக வைத்துக்கொள்ளாமலிருத்தல், சாப்பிட்டவுடன் வாயைத் தண்ணீரால் நன்ருய்க் கொப்பளிக்காமலிருத்தல், அடிக்கடி இனிப்புப் பதார்த்தங்களை உண்டு வாய் கொப்பளிக்காமலிருத்தல், பற்களுக்கு வேண்டிய சுண்ணும்புச் சத்து, வைட்டமின் சத்து உடம்பில் குறைதல் முதலியன.

இப் பூச்சிப் பற்களை முன்னதாகவே கண்டுபிடித்து, உங்கள் பல் டாக்டரைக் கொண்டு பூச்சி அரித்த பாகத்தை அகற்றிவிட்டு, அந்தப் பாகத்தில் அதற்கென உபயோகப்படுத்தப்படும் "கட்டாபர்சா," "அமால்கம்" போன்றவைகளால் அடைத்து விடலாம். சில சந்தர்ப்பங்களில் பூச்சி அரித்த பற்களைப் பிடுங்கி விட வேண்டிய நிலையும் வரும்.

## 5. ஈறுகளில் இரத்தம் கசிதலை உடனடியாகக் கவனியுங்கள்.

சாதாரணமாகவோ அல்லது பல் துலக்கும்பொழுதோ ஈறுகளில் இரத்தம் கசிதலை ஈறுகளின் அழற்சி அல்லது ஆங்கிலத்தில் "ஜின்ஜிவைட்டிஸ்" என்று சொல்வதுண்டு. இதற்குப் பல காரணங்கள் உண்டு. பற்களின் மேல் காறை படிந்து, அந்தக் காறை ஈறுகளை உறுத்திக்கொண்டிருப்பது ஒரு முக்கிய காரணமாகும். மேற்படி காறைகளைப் பல் டாக்டர்களைக் கொண்டு நீக்கிவிட்டு, பற்களைச் சுத்தம் செய்து கொண்டால், ஈறுகளின் அழற்சி குணமாக்கப்பட்டு, இரத்தம் கசிதலும் நின்று விடும்.

சிலர் பச்சை வெட்டு மருந்துகளைச் சாப்பிடுவதாலும், சில விஷ அணுவுயிர்களாலும் உடம்பில் சத்துப்பொருள் ஸி வைட்டமின் குறைதலாலும் ஏற்படுவதுண்டு. இன்னும் இரத்தத்தில் சுண்ணும்புச் சத்து குறைவதாலும் ஏற்படலாம். இதற்கெல்லாம் நிவாரணம் அளிக்க உங்கள் பல் டாக்டரிடம் யோசனை பெறுங்கள்.

## 6. பயோரியா நோயை ஆரம்பத்திலேயே கவனிக்க வேண்டும்.

ஈறுகளினின்று சீழ் வருவதையே "பயோரியா" என்று அழைப்பதுண்டு. பயோரியாவுக்குக் காரணம், நான் முன்பு கூறினபடி, பற்களின் மேல் ஈறுகளின் ஓரத்தில் காறை படிந்து, ஈறுகளின் அழற்சி ஏற்படுத்தி, நாளடைவில் சீழ் வைக்க ஆரம்பிக்கிறது. இவ் வியாதி பல் வியாதிகளில் மிகவும் கொடியது. இவ்வியாதியினுல் உடம்பில் பல பாகங்களும் தாக்கப்பட்டு பல இன்னல்களுக்கு ஆளாக வேண்டியதிருக்கும். இவ் வியாதி முற்றிஞல், தாடை எலும்புகளைத் தாக்கி, பற்கள் பூராவும் இழந்துவிட நேரிடும். இவ் வியாதி இருப்பதாக ஆரம்பத்தில் பலருக்குத் தெரியாது. வருடம் ஒரு முறை பல் டாக்டர்களால் உங்கள் பற்களைச் சோதித்

தறியும் பழக்கம் இருந்தால், இதை ஆரம்பத்திலேயே அகற்றி விடலாம்.

**7 பற் கூச்சத்தைத் தடுக்க வேண்டும்.**

பற் கூச்சம் என்பது பற்களில் தேய்மானம் ஏற்பட்டு, மேற்பூச்சு அழிந்து போய், உணர்ச்சி நரம்புகள்வெளிப்படுவதால்ஏற்படுவதே யாகும். அல்லது ஈறுகள் தங்கள் இயற்கையான நிலையைவிட்டு அகற்றப்பட்டு, பற்களின் வேர் வெளிப்படுவதால் ஏற்படும். இதற்குக் காரணம் சொர சொரப்பான பற்பொடிகளைக் கைவிரல்களினால் அழுத்தித் தேய்ப்பதாலும், பிரஷ் உபயோகிப்போர் தப்பான முறையில் பிரஷை உபயோகிப்பதாலும் ஏற்படும். மேலும் ஈறுகளின் ஓரத்தில் அதிகம் காறை படிந்து, ஈறுகள் நிலை பெயர்வதாலும் ஏற்படும். உங்கள் பல் டாக்டரே இதற்கு யோசனை அளிக்க முடியும்.

**8. வெற்றிலை பாக்கு, புகையிலை, புகையிலைப் பொடி உபயோகிப்பதைத் தவிர்க்க வேண்டும்.**

வெற்றிலை பாக்கு, புகையிலை உபயோகிப்பது பற்களில் காறை படிந்து, பற்களின் அழகைக் கெடுத்து விடுவதோடு, ஈறுகளிலும் கன்னத்திலும் புற்று நோய் ஏற்படக் காரணமாகிறது. இதில் முக்கியமாகப் புகையிலையை வாயில் அடக்கிக் கொள்வதும், புகையிலைப் பொடியை ஈறுகளில் வைத்துக்கொள்வதும் கூடாது. கன்னத்தின் உள்பாகத்திலோ, ஈறுகளிலோ புண் ஏற்பட்டால், அதை உடனடியான ஆரம்பத்திலேயே கவனித்துக்கொள்ள வேண்டும்.

**9. ஞானப் பல் வெளிக்கிளம்பாமல் அதனால் வலி, வீக்கம் ஏற்பட்டால், அதை உடனடியாகக் கவனிக்க வேண்டும்.**

ஞானப் பல் அல்லது மூன்றாவது கடைவாய்ப் பல் சிலருக்கு ஈறுகளால் மூடப்பட்டு, திடீரென்று வலி, வீக்கம் ஏற்பட்டு, அதிக தொந்தரவுகளை விளைவிக்கும். வாய் திறக்க முடியாமலும் போய்விடும். சிலர் இவ்வித நிலைமையை அம்மைக்கட்டு என்று நினைத்துப் பரிகாரம் தேடுவதுண்டு. இதற்குப் பல் டாக்டர்களே சரியான நிவாரணம் அளிக்க இயலும்.

**10. பற்களை இழந்த இடங்களில் பல் கட்டிக்கொள்ள வேண்டும்.**

ஏதோ ஒரு காரணத்தால் பற்களை இழந்து போனால், பல் கட்டிக்கொள்ளாவிட்டால், முன்னம் பற்களாய் இருந்தால், முகத்தின் அழகு கெட்டுப்போவதோடு, மற்றப் பற்களின் அமைப்பும் அழிந்துவிடும். கடைவாய்ப் பற்களை இழந்தவர்கள் பல் கட்டிக் கொள்ளாவிட்டால், இழந்த பல்லின் பக்கத்தில் இருக்கும் பற்கள் சாய்ந்து போய், ஆகாரங்கள்

(44-ம் பக்கம்பார்க்க)

# முக்கிய அறிவிப்பு

---

## "ஆரம்பக்கல்வி" பத்திரிகை இனும்

சென்ற 1960-61 ஆண்டுக்கு எமது வேண்டுகோளுக்கிணங்கி, பற்பல எயிடட் பாடசாலை மானேஜர்களும், தலைமை ஆசிரியர்களும், எமது வீரபாண்டியன் வாசகங்களையும், திரு. வி. க. வாசகங்களையும் வைத்தும், சிலர் இதர பாட புத்தகங்களைப் பாடசாலையில் வைத்தும், ஆதரித்தமைக்கு எமது அன்பு கலந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இவ்வாண்டும் எமது பாடபுத்தகங்களைத் தொடர்ந்து வைத்துக் கொள்ளும் தலைமை ஆசிரியர்கள், 1961–62–க்குத் தொடர்ந்து வைத்துக்கொள்வதாக, நமது அலுவலகத்திற்கு 1961 ஆகஸ்டு 31-ம் தேதிக்குள் கடிதம் மூலம் தகவல் அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

அவ்விதம் தகவல் அனுப்பும் பாடசாலையின் பெயர்கள் 1961–62 ஆண்டுக்கு மறுபடியும் புதிதாக ரிஜிஸ்டர் செய்யப்பட்டு வழக்கம் போல் எமது 'ஆரம்பக் கல்வி' பத்திரிகை இனுமாகத் தொடர்ந்து அனுப்பப்படும். புத்தகங்கள் வாங்கும் புத்தகக்கடை ரசீதுகளை (Cash Bills) அலுவலகத்திற்கு 1961 ஆகஸ்டு மாதம் 31-ம் தேதிக்குள் அவசியம் அனுப்பி விடவும். சென்னை அலுவலகத்திற்கு அனுப்பப்படும் ஆர்டர்களுக்கு Bill-கள் அனுப்பத் தேவையில்லை; ஆடர்களைக்கொண்டே பெயர்கள் ரிஜிஸ்டர் செய்யப்படும்.

## ஆர்டர்கள் அனுப்பும்போது கவனிக்கவேண்டியவை

முன்பு தபாற் கட்டணம் 5 தோலாவுக்கு அரையணாவாக இருந்தது; தற்போது ஓரணாவாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக 20 ரூபாய்க்குப் பெறுமான, சுமார் நாற்பது புத்தகங்கள் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டுமானால் அதற்கு தபாற் செலவு 5 முதல் 6 ரூபாயாகின்றது. அதாவது 20 ரூபாய்க்குக் கொடுக்கப்படும் 20% கமிஷன் ரூபாய் 4-க்கு மேல் தபாற் செலவாகிறது. ஆதலால் புத்தகங்களை இரயில்வே பார்சீல் மூலம் வரவழைத்துக்கொள்வது மிகவும் இலாபகரமானது. இரயில்வே செலவு 20 ரூபாய் பெறுமான புத்தகத்துக்கு 1 ரூபாய்க்குமேல் ஆகாது.

**ஆதலால், நேரிடையாகச் சென்னை அலுவலகத்திற்கு ஆர்டர் அனுப்புபவர்கள், மறக்காமல் அருகிலுள்ள இரயில்**

நிலையத்தின் (Railway Station) பெயரை ஆர்டரில் குறிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். அப்படிக் குறிக்கப்படாமல் அனுப்பப்படும் ஆர்டர்கள் நிறுத்தி வைக்கப்பட்டுத் தங்கள் பதில் கிடைத்த பிறகே அனுப்பப்படும்.

கமிஷன் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை, தபால் மூலம் தான் அனுப்ப வேண்டுமென விரும்புகிறவர்கள் தங்கள் ஆர்டர்களிலேயே அவ்விதம் குறிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இரயில்வே நிலையம் (Railway Station) அருகாமையில் இல்லாதவர்களும், மொத்தமாகச் சென்னையிலிருந்து புத்தகங்களை வரவழைத்துக்கொள்ள வசதி இல்லாதவர்களும், தங்களுக்கு அருகாமையிலுள்ள புத்தக வியாபாரிகளிடம் ஆர்டர் கொடுத்துச் சில்லரையாக வாங்கிக் கொள்வது இலாபகரமானதாகும்.

எல்லாப் புத்தக வியாபாரிகளுக்கும் 20% கமிஷன் கொடுக்கின்றோம். அவர்கள் செலவும், இலாபமும் போகக் குறைந்தது ரூபாய்க்கு 1 அணு (6¼%) கமிஷன் கொடுக்கும்படியாவது கேட்டு வாங்கலாம். 20% கமிஷன் வேண்டுமென்று விரும்புபவர்கள் சென்னை அலுவலகத்திற்கே ஆர்டர்கள் அனுப்பி இரயில்வே நிலையத்தின் (Railway Station) பெயரையும் தவறாமல் குறித்தனுப்பவும். செலவு 5% போக 15% ஆசிரியர்களுக்கு அவசியம் இலாபம் கிடைக்கும்.

இன்னும் எங்கள் புத்தகங்கள் அகப்படாத இடங்களில் ஆங்காங்குள்ள வியாபாரிகளை நமது புத்தகங்களை வரவழைத்து விற்கும்படி ஏற்பாடு செய்து கொள்ளவும்.

---

(42-ம் பக்கத் தொடர்ச்சி)

அரைத்துச் சாப்பிடுவதிலும் இடைஞ்சல் உண்டாகும். மேலும் இழந்துபோன கடைவாய்ப் பற்களின் நேரே இருக்கும் கடைவாய்ப் பல் தன் வரிசையைவிட்டு இறங்கவோ ஏறவோ செய்யும். பல் கட்டிக்கொள்வதால், வாயில் துர்நாற்றம் ஏற்படுகிறது என்பது தவறு. மிகவும் ஆடின பற்களைக் கம்பியினால் இணைத்து மற்ற பற்களோடு கட்டிக்கொள்வதும் தவறு.

மேற்கூறிய காரணங்களால் ஒவ்வொருவரும் உடனடியாக உங்கள் அருகில் உள்ள பல் டாக்டரிடம் பற்களைச் சோதித்துக் கொள்வது மிக மிக அவசியம். பள்ளி மாணவர்களுக்குப் பள்ளி அதிகாரிகள் மாணவர்களின் பற்களைச்சோதிக்க ஒழுங்கு செய்ய வேண்டும்.

— நல்வழி

# உழைப்பும் உயர்வும்

(மா. மலையழகன்.)

உழைப்பதனால் உழைப்பதனால் உயர்வடைவாய்நீ—இதை
உணர்ந்துதினம் ஊக்கமுடன் செயல்புரிவாயே !
உயர்ந்தவர்யார் ? உயர்ந்தவர்யார் ? உழைப்பில்லாமலே—இன்று
உயர்ந்திருப்போர் வாழ்க்கையைப்பார் சரித்திரத்திலே (உழை)

அறிவதெல்லாம் அறிவதெல்லாம் அறிந்திட வேண்டும்—அவை
அனைவருக்கும் பயன்படவே வாழ்ந்திடவேண்டும் !
அறவழியில் பொருளியற்ற முனைந்திடவேண்டும்—அதை
அனுபவித்து அளித்துஇன்பம் அடைந்திட வேண்டும் (உழை)

மறைவதில்லை ! மறைவதில்லை ! உலகினில்என்றும்—பொது
நலம்பெருக உழைப்பவர்கள் உடல்உயிர்நீத்தும்
பிறந்துவிட்டாய்! பிறந்துவிட்டாய்! இறப்பதன்முன்னும்-உந்தன்
பெயர்நிலைக்கப் புகழ்நிலைக்க உழைத்திட வேண்டும் (உழை)

# சமூகப் பாடப் பயிற்சி நூல்

## (Social Studies Record Books.)

### நான்காம் வகுப்பு

புதிய பாடத்திட்டப்படி திருத்தி அமைக்கப்பட்டது.

*மாவட்டங்கள்*

| | |
|---|---|
| சென்னை | 75 ந.பை |
| செங்கற்பட்டு | ,, |
| வட ஆர்க்காடு | ,, |
| தென் ஆர்க்காடு | ,, |
| சேலம் | ,, |
| கோயமுத்தூர் | ,, |
| நீலகிரி | ,, |
| திருச்சிராப்பள்ளி | ,, |
| தஞ்சாவூர் | ,, |
| மதுரை | ,, |
| இராமநாதபுரம் | ,, |
| திருநெல்வேலி | ,, |
| கன்னியாகுமரி | ,, |
| ஐந்தாம் வகுப்பு | 87 ந.பை |
| ஆறும் வகுப்பு | 87 ந.பை |

### பழைய பாடத் திட்டப்படி

| | |
|---|---|
| ஏழாம் வகுப்பு | 62 ந.பை |
| எட்டாம் வகுப்பு | 62 ந.பை |

(மாதிரிப் பிரதி வேண்டுவோர் வேண்டிய புத்தகங்களின் பாதி விலைக்கு, M. O. அல்லது ஸ்டாம்பு வாங்கியனுப்பவும்)

# எமது புதிய வெளியீடுகள்

(புதிய பாட திட்டப்படி)

ஆறும் வகுப்புக் குரியவை :

## 1. திரு. வி. க. செந்தமிழ்ச் செல்வம்

தொகுப்பாசிரியர் : த. சே. உமாபதி, M. A., L. T. (Dip. in Geog)

கெஜட் பக்கம் 25 தேதி 10-5-'61 : விலை ரூ. 1-25

## 2. புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர் : A. C. பாலசுந்தரம், B. A., L. T.

கெஜட் பக்கம் 28 தேதி 10-5-'61 : விலை ரூ. 1-50

## 3. சமூக நூல்

ஆசிரியர் : துரை பழனிவேலு, B. A., L. T.

கெஜட் பக்கம் 14 தேதி 10-5-'61 : விலை ரூ. 1-75

## 4. பொது விஞ்ஞானம்

ஆசிரியர் : K. லக்ஷ்மி நாராயணசாமி, B. A., L. T.

கெஜட் பக்கம் 30 தேதி 10-5-'61 : விலை ரூ. 1-50

## 5. அறிவுச்சுடர்

ஆசிரியர் : த. சே. உமாபதி, M. A., L. T. (Dip. in Geog)

கெஜட் பக்கம் 10 தேதி 10-5-'61 : விலை ரூ. 0-62

## 6. Mother India Supplementary Reader

(English Non-detailed)

By Mrs. Lucy Arulraj.

கெஜட் பக்கம் 13 தேதி 10-5-'61 : விலை ரூ. 0-50

பத்தாம் வகுப்புக்குரியவை :

## 1. பொது விஞ்ஞானம்

ஆசிரியர் : K. லக்ஷ்மி நாராயணசாமி, B. A., L. T.

கெஜட் பக்கம் 35 தேதி 10-5-'61 : விலை ரூ. 2-50

## 2. இலக்கணம்-கட்டுரை-மொழிப் பயிற்சி

ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனார்

கெஜட் பக்கம் 31 தேதி 10-5-'61 : விலை ரூ. 1-50

## அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

('ஆரம்பக்கல்வி' ஆபீஸ்)

**94–95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை—1.**

தபால் பெட்டி எண் 1818. டெலிபோன் எண் 55844.

உயர்தர ஆரம்பப் பள்ளிகளுக்கு...

## வீரபாண்டியன் தமிழ் வாசகம்

ஆசிரியர்: வித்துவான் வை. சுப்பிரமணியம்

| | புத்தகத்தின் விலை | | | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|---|---|
| ஏழாம் வகுப்பு | 0 | 14 | 0 | 2 | 13-5-'59 |

*இந்தப் புத்தகம் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் தபால் செலவு உள்பட 50 ந. பை. M. O. அனுப்பவும்.*

## சமூக நூல்

ஆசிரியர்:

ஆசிரியர்: த சே உமாபதி, M. A., L. T.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஏழாம் வகுப்பு | 2 | 0 | 0 | 3 | 18-5-'50 |
| எட்டாம் வகுப்பு | 1 | 12 | 0 | 3 | 18-5-'60 |

*இந்த இரண்டு புத்தகங்கள் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் தபால் செலவு உள்பட ரூ. 2-00 M. O. அனுப்பவும்.*

## புதுமுறை சங்கக் கணிதம்

V. S. லீலா, B. A. B. T.,
V. K. சேஷாத்திரி B. A., L. T.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஏழாம் வகுப்பு | 1 | 4 | 0 | 2 | 30-4-'58 |
| எட்டாம் வகுப்பு | 1 | 4 | 0 | 5 | 9-4-'58 |

*இந்த இரண்டு புத்தகங்கள் மட்டும் மாதிரிப் பிரதி வேண்டுவோர் தபால் செலவு உள்பட ரூ. 1-25 M. O. அனுப்பவும்.*

## சமூகப் பாடப் பயிற்சி நூல்

| | | | |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 0 | 14 | 0 |
| ஏழாம் வகுப்பு | 0 | 10 | 0 |
| எட்டாம் வகுப்பு | 0 | 10 | 0 |

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்
94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.



**Edited Printed and Published by P. VEERARAGHAVAN, at Venkatesan Press 2/65, Broadway, Madras-1.**